Registered as a news paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 28 ஆம் நாள் துல்கஃதா 15 (10-4-63) புதன்கிழமை இதழ் 61

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

# சில இடங்களுக்கு தமிழ் தந்தி ஏற்க முடியாது

## யாழ். தபால் நிலையத்தில் அதிகாரிகள் மறுப்பு

## பார்லிமெண்டில் பிரச்னை வரும்

யாழ்ப்பாணம், புதன்

**தமிழரசுக்கட்சியினர் ஆரம்பித்த 'தமிழியக்க' வாரத்தின் இரண்டாம்நாளான நேற்று வத்தளை, மாபோலை போன்ற இடங்களுக்கு அனுப்புவதற்காக யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோரில் கொடுக்கப்பட்ட தமிழ்த் தந்திகளை ஏற்க முடியாது என தபால்கந்தோர் அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர்.**

இத்தபால் கந்தோர்களில் தமிழ்த் தந்திகளை ஏற்று விலாசதார்களிடம் கொடுக்கக் கூடிய வசதிகள் இல்லையென்றும் இதனால் இத்தந்திகளை ஏற்று அனுப்புவதற்குப் பொறுப்பேற்க முடியாதென்றும் யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் அதிகாரிகள் தெரிவித்துவிட்டனராம்.

குறிப்பிட்ட இடங்களுக்குத் தமிழில் தந்தி அனுப்ப முடியாதென்பதை தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் எழுத்தில் தரும்படி கேட்டதாகவும் அதற்கு அந்த அதிகாரிகள் சம்மதித்து எழுத்தில் கொடுத்ததாகவும் தெரிகிறது.

தமிழ்த் தந்திகளை யாழ்ப்பாணம் தபால்நிலைய அதிகாரிகள் ஏற்க மறுத்ததுபற்றி தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் விரைவில் பார்லிமெண்டில் சம்பந்தப்பட்ட மந்திரிகளிடத்தில் கேட்பார்களென்று தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் தெரிவிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின்

## 'தமிழ் போராட்டத்தில் ஜி. ஜி. கலந்து கொள்வாரா?'

### முத்திரைச் சந்தை கூட்டத்தில் டாக்டர் நாகநாதன் கேள்வி

யாழ்ப்பாணம், புதன்

**"தமிழ் மொழி உரிமையில் அரசாங்கம் கைவைக்குமாயின் அதனை ஒன்ருகத் திரண்டு எதிர்க்கவேண்டுமெனக் கூறும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சியின் தமிழ்ப் போராட்டத்தில் கலந்து கொள்ள முன்வருவரா?" என்று டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் நல்லூர் முத்திரைச் சந்தை மைதானத்தில் நடைபெற்ற தமிழியக்க வாரப் பிரசாரக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.**

அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

"ஜனநாயகத்தின் கீழ் ஒரு கிராமத்திலோ பட்டினத்திலோ வாழும் மக்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் திருப்தி ஏற்படாவிடில் கூட்டம் தமது தீர்மானத்தை அரசாங்கத்திற்கு அனுப்பும். ஜனநாயக அரசாங்கம் தவறு நேரிடின் அதனைத்திருத்தும். ஆனல் இலங்கை அரசாங்கம், தமிழ் மக்களை சிங்களம் மட்டும் சட்டத்தின் கீழ் அநியாயஞ் செய்கின்றது என்று ஏகோபித்து எதிர்த்தபோதிலும் எள்ளளவேனும் தாம்செய்த பிழைகளையும் தமிழருக்குச் செய்த அநியாயங்களையும் நிறுத்திக் கொள்ளவில்லை,

சிங்கள நாட்டில் சிங்களவர் அரசாங்க மொழியான தமது தாய்மொழியை உபயோகப்படுத்துவதனை தமிழர்கள் வரவேற்கிருர்கள். அதேபோல தமிழ் நாட்டிலும் அரசாங்க பாஷையாக தமிழ் பாவிக்கப்படாமல் இருப்பதனையே தமிழ் மக்கள் எதிர்க்கிருர்கள். இந்த எதிர்ப்பை தமிழினம் ஜனநாயக ரீதியில் அரசாங்கத்திற்கு காட்டியுள்ளது.

சத்தியாக்கிரகம் மூலமாக தமிழ் நாட்டில் சிங்கள அரசாங்கத்தின் நிர்வாகத்தையும் ஆதிக்கத்தையும் முற்ருக ஸ்தம்பிக்கச் செய்தும் அரசாங்கம் அதற்கு செவிசாய்க்காமல் ராணுவம் மூலமாக ஜனங்களை அடித்து நொருக்கியது. ராணுவத்தை இத்தேசத்தில் நிலைநாட்டி அவசரகாலச்சட்டத்தை நீடித்து ஜனநாயகத்தை கைவிட்டு காலனி ஏகாதிபத்தியத்தைத் தமிழ் மக்கள் மீது திணித்திருக்கிருர்கள். அதே சமயம் எல்லா இலாகாக்களிலும் தமிழ்ப்பிரதேசங்களில் சிங்கள உத்தியோகத்தர்களை அனுப்பி சிங்களத்தில் நடத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தமிழியக்கம் விஸ்தரிக்கப்பட்டது

### வட்டுக்கோட்டையில் இன்றுதொடங்கும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியின் எல்லாம் தமிழ் இயக்கம் இரண்டாவது நாளாக நடைபெற்றது. யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் தொண்டர்கள் கருமங்களைத் தமிழிற் செய்யும்படி மக்களைக் கேட்டுக் கொண்டனர்.

எல்லாம் தமிழ் இயக்கம் நேற்று வடபகுதியின் பல்வேறிடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. நேற்று கரவெட்டி, உடுப்பிட்டி, பருத்தித்துறை தபாற்கந்தோர்களில் தமிழ் இயக்கம் ஆரம்பமாகியது. தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் மக்களைத் தமிழில் கருமமாற்றும்படி கேட்டுக் கொண்டனர்.

இன்று வட்டுக்கோட்டையிலுள்ள தபாற் கந்தோர்களில் தமிழ் இயக்கம் ஆரம்பிக்கப் படவிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் தமிழியக்கத்தைத் தீவிரப்படுததுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

---

நியூயார்க், ஏப்ரல் 7

அமெரிக்காவில் இப்போது 50 லட்சம் பேர் வேலையற்று இருக்கின்றனர். இது அமெரிக்காவில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 6.1 சதவீதமாகும்.

அமெரிக்க தொழிற்சாலைகளில் தானாக இயங்கும் யந்திரங்கள் அமைக்கப்படுவதன் காரணமாக வருடத்துக்கு 15 லட்சம்பேர் வேலை இழப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## கனடா பொது தேர்தல்

ஒட்டாவா, ஏப். 9

கனடா பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான திரு. லெஸ்டர் பியர்ஸனின் லிபரல் கட்சிக்கு இதுவரை 126 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன. பிரதமர் டீபன்பேக்கரின் கன்ஸர்வேட்டிங் கட்சிக்கு 34 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன.

## திருமலையில் தமிழ்இயக்கம் திடீரென ஆரம்பம்

திருக்கோணமலை, செவ்.

இம்மாதம் 20-ம் திகதி திருமலையில் ஆரம்பிக்கப்படவிருந்த எல்லாம் தமிழியக்கம் திடீரென இன்று ஆரம்பிக்கப்பட்டது. எல்லாம் தமிழ் இயக்கம் திருமலை பெரிய தபாற்கந்தோரில் எம். பி. திரு ந. ஆர். இராஜவரோதயம் தலைமையில் ஆரம்பமானது.

இராஜவரோதயத்தின் இல்லத்தில் திங்கட்கிழமை மாலை தமிழரசுக் கட்சியின் திருமலை கிளையின் அவசரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைத் தொடர்ந்தே திடீரெனத் தமிழ்

(8-ம் பக்கம் பார்க்க)

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும் சுறுணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

மெற்றசிஸ்ரொக்ஸ்

METASYSTOX

T'GRAMS ROYAEL ROYAL DISPENSARY PHONE 397 JAFFNA

## காணி சுவீகரித்தற் சட்டம்[அத்தியாயம்460] 7-ம் பிரிவின்படி

### அறிவித்தல்

மன்னூர்பனங்கட்டிக்கொட்டு மீன்பிடித் தொழிலாளருக்கென வீட்டுத் திட்டம மைப்பதற்காகக் கீழ்க் குறிக்கப்படும் காணியை அரசாட்சியார் சுவீகரிக்க எண்ணியுள்ளனர். மிகுதி விபரங்களுக்கு 1963-ம் ஆண்டு சித்திரை (ஏப்ரல்) மாதம் 11-ந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியின் மூன்றும் காணிப்பகுதியைப் பார்க்கவும்.

மன்னூர் மாவட்டம், மன்னூர் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள மன்னூர் பட்டின விதானையின் பகுதியிலுள்ளதும் மன்னூர் பட்டினசபையின் எல்லைக்குட்பட்டதுமான தோட்டக்காடு என்னும் கிராமத்தில் இருப்பதுமான நோயாமந்து என அழைக்கப்படும் காணி பிரதமப் படம் எ 2395-ல் 1-ம் துண்டு. விசாலம் 3 றூட் 30.5 பேர்ச்சுகள்.

ஒப்பம்: என். பி. ஜெகநாதன்
மன்னூர்மாவட்ட காணி சுவீகரிப்பு அதிகாரி.

கச்சேரி, மன்னூர்.

---

## வரி விளம்பரம்

### நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை

பழைய மாணவர்சங்க வருடாந்தக் கூட்டம் 13-4-63சனிக்கிழமை மாலை நாலரை மணிக்கு நடைபெறும். பழைய மாணவர் எல்லோரும் அழைக்கப்படுகின்றனர்.

கௌரவ காரியதரிசிகள்
869

---

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

### நன்றி தெரிவித்தல்

4-4-63-ல் அகால மரணமடைந்த சங்கானை கிழக்கு வாசியும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியருமான திரு. வ. தம்பிப்பிள்ளையின் இறுதிச் சடங்கிற் பங்கு பற்றிய—அனுதாபம் தெரிவித்த சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம். மனைவி, சகோதரன், பாடசாலை ஆசிரியர்கள். 872

---

### தேவை

வலி மேற்கு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு கீழ்க் காண்போர் தேவை:-

பில் கிளாக் ஒன்று, விற்பனையாளர் ஒன்று. தகுதி, குறைந்தது கனிஷ்டதராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல், வயது 21—35. சம்பளம் 50-90 / ரூ. 4×10

அலவுன்ஸ் சமாச நடைமுறையின் உள்ளபடி. பிணைப்பணம் ரூபா 600. கூட்டுறவுக் கலாசாலைப் பயிற்சி பெற்றிருப்போர் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவு திகதி 20-4-63 பதிவுத் தபாலில் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். காரியதரிசி, வலிமேற்கு—சமாசம் சங்கானை.

---

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் நல்லை நாத சுவாமி கோவில் பூங்காவன உற்சவத்தின்போது இன்னிசைச் செல்வி ராதா சோமசுந்தரம் பார்வதி திருமணம்' என்பது, பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். விழாவிற்குத் தலைமை வகித்த முடிக்குரிய நியாயவாதி திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை செல்வி ராதா சோசுந்தரத்தைப் பாராட்டி ஆசியுரை வழங்கினர்.

பின்னர் அம்மையப்பனுக்குத் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.

---

# 'பெண்கள் விழிப்புற்ருல் தாய்க்குலம்பெருமையடையும்'

## வட்டுச் சிவன் மாதர்கழக ஆண்டுவிழாவில் பேச்சு

சுழிபுரம், திங்கள்

வட்டுச் சிவன் மாதர் கழக 5-வது ஆண்டு நிறைவு விழா சித்த ஆயுள்வேத சங்கத் தலைவர் திரு. அ. க. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெண்கள் செய்துவரும் ஆக்கபூர்வமானபணியை மறக்க முடியாது என்றும் குடிசைக் கைத்தொழில், குடும்ப வாழ்க்கை, சமூகபணி ஆகிய துறைகளில் பெண்கள் அதிக பங்கெடுத்து உழைக்கவேண்டும் என்றும் இதன் மூலம் நாடு சுய தேவையை பூர்த்தி செய்வதுடன் மக்கள் நல்ல பிரஜைகளாக வாழவும் முடியும் என்றும் தலைவர் அப்போது குறிப்பிட்டார்.

திரு. நாவேந்தன் பேசுகையில் கூறியதாவது: "தேசிய உணர்ச்சி வீறுகொண்டு எழுகிறபோதுதான் நாடு நிர்வாகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் வளமடைகிறது. தேசிய உணர்ச்சியுடன் செயலாற்றுவதில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகத் தொண்டு செய்யமுடியும். தமிழ்ச் சமுதாயம் இவ்வுண்மையினை ஆயிரமாயிரமாண்டுகளுக்கு முன்னமே உணர்ந்திருந்தது, அதற்கு முன்னகவே அரசியலிலும், இலக்கியத்துறையிலும்ஔவையார் தொட்டுப் பல பெண்மணிகள் அருந்தொண்டாற்றியுள்ளனர். சமுதாயத்தின் சகலதுறைகளிலும் பெண்ணினம் விழிப்புப் பெற்றுவிட்டது என்பதற்கு நிகழ் காலம் சிறந்த எடுத்துக்காட்டாகும் இவ்விருப்புணர்ச்சி உண்மையான தேசியப் பற்றுடன் மிளிருமானல் நமது நாடும் சிறப்பாக தமிழ்த்தாய்க் குலமும் பெருமை அடையும். நமது சகோதரிகள் இவ்வுண்மையை உணர்ந்து ஒற்றுமையுடன் உழைத்து முன்னேற வேண்டும்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:- 'எமது நாட்டைக் காக்க பெண்கள் உழைக்க முன்வரவேண்டும். அப்படி உழைக்க வருவார்களானல் எமது இனம் விடுதலை பெற்று சுதந்திரமாக வாழ முடியும். வீட்டுக்குள் இருக்கும் பிரச்னைகளை மட்டும் தீர்த்தால் போதாது. எமது சமூகத்தை சூழ்ந்த பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு ஆண்களுடன் சமானமாக நின்று உழைப்பதற்கு பெண்கள் எப்போதும் தயாராக முன்வர வேண்டும். பொருளாதார அபிவிருத்திக்கு குடிசைக் கைத்தொழிலை வளர்க்க வேண்டும்.

குடிசைக் கைத்தொழில்மேற்பார்வை அதிகாரி திரு. எஸ். அருள்நாயகம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

---

## '3 மாதம் காத்திருந்தும் சம்பளம் கிடைக்கவில்லை'

மன்னூர், செவ்வாய்

மன்னூரிலுள்ள சென். சேவியர் கல்லூரியில் இந்த வருட ஆரம்பத்தில் காவல்காரராக நியமிக்கப்பட்ட ஒருவருக்கு இன்னமும் சம்பளம் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது.

கம்பனியிலிருந்து இந்த வருடம் ஜனவரியில் இங்கு மாற்றலாகியுள்ள இந்தக் காவலாளர் 20 வருடகால சேவை செய்துள்ளார். தாம் பெறும் சம்பளத்தைக் கொண்டே குடும்பத்தை நடத்தும் இந்தக் காவலாளர் இவ்விதம் சென்ற மூன்று மாதங்களாக சம்பளம் பெருததினல் பெரிதும் கஷ்டமான நிலையிலிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## உதவி மந்திரி விலகமாட்டார்

கொழும்பு, செவ்வாய்

நிதி அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு ஆர். எஸ். வி. போலியர் தொடர்ந்தும் தமது பதவியில் இருந்துவர சம்மதம் தெரிவித்துள்ளதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இது சம்பந்தமாக நிதி மந்திரி திரு பி பி. ஜி. கலுகல்ல அறிவித்துள்ளதாவது:

திரு. போலியர் அதிகவேலை காரணமாக தாம் நிதி அமைச்சரின் பார்லிமெண்டரிக் காரியதரிசிப் பதவியிலிருந்து விலகுவதற்கு அனுமதியளிக்குமாறு கேட்டிருந்தார். அனல் நான் அவருக்குக் கொடுத்துள்ள உறுதியின் பேரில் திரு. போலியா தொடர்ந்தும் அப்பதவியை வகித்து வர சம்மதித்துள்ளார்.

---

கனடாவில்

## லிபரல் கட்சிக்கு அதிக ஸ்தானம்

ஒட்டாவா, ஏப்ரல் 9

கனடாவில் நடைபெற்றுவரும் பொதுத் தேர்தலில் லிபரல் கட்சிக்கு அதிக ஸ்தானங்கள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

10 மாத காலத்துக்குள் இரண்டாவது தடவையாக நடைபெற்றுவரும் இத்தேர்தல் நேற்று ஆரம்பமாகியது. இது வரை லிபரல் கட்சி 85 ஸதானங்களில் வெற்றிபெற்றிருப்பதாக அறியப்படுகிறது.

கன்சர்வேட்டிவ் கட்சி இது வரை 64 ஸ்தானங்களிலேயே வெற்றிபெற்றுள்ளது.

ஒரு கோடி வாக்காளர் கலந்துகொள்ளும் இத்தேர்தலில் கனடாவின் அடுத்த பிரதமர் கன்ஸர்வேட்டிவ கட்சியைச் சேர்ந்த டிபன் பேக்கரா அல்லது லிபரல் கட்சியைச் சேர்ந்த லெஸ்டர் பியர்ஸனு என்பது நாளை தெரிந்துவிடும்.

---

## விவசாயிகள் புகார்

குருநாகலை, செவ்வாய்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தம்மைச் சுரண்டுவதாக இங்குள்ள கிராமப்புற மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் தாம் நெல்லைக் கொடுத்தால் அதை அளந்து பெறுவதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கதினர் தவருன வழிவகைகளைக் கையாள்வதால் தாம் சுரண்டப்படுவதாக இக் கிராம விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

10 புசல் நெல்லைத் தாம் சரியாக அளந்துகொடுத்தால் கூட்டுறவுச் சங்கத்தினர் அதை அளக்கும்போது 9 புசலாக இருப்பதாக இந்த விவசாயிகள் புகார் கூறியுள்ளனர்.

---

கல்வி இலாகாவுக்கும் மந்திரிக்கும் 24 க்கு மேற்பட்ட கடிதங்கள் எழுதியிருந்தும் ஒரு வித பதிலும் இவருக்குக் கிடைக்கவில்லையாம்.

புது வருடத்துக்குமுன் தாம் சம்பளத்தைப் பெற்று விடுவார் என இவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

---

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## "ஆதாரமில்லை"

சென்ற 23-3-63-ல் வெளிவந்த "ஈழநாடு" பத்திரிகையில் ஆசிரியர் குறிப்பில் "கிளிநொச்சியில்" என்ற தலைப்பில் கிளிநொச்சிப் பொலிசாரைப் பற்றி ஓர் அன்பர் எழுதிய கடிதத்தை எந்தவித ஆதாரமுமின்றி வெளியிட்டுள்ளீர்கள். நான் அறிந்த வரையில் தாங்கள் குறிப்பிட்ட சம்பவங்கள் எதுவும் தற்பொழுது கிளிநொச்சிப் பொலிசிலிருக்கும் அதிபரின்கீழ் நடைபெறவில்லை. அப்படி நடந்ததாக எதுவும் இன்றுவரை தெரியவில்லை. தயவு செய்து இதைப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும்.

அ. சிவசுந்தரம்
கிளிநொச்சி பா. உ.

## தமிழர் ஒற்றுமை

சென்ற 1956-ம் ஆண்டில் "சிங்களம் மட்டும்" சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு தற்பொழுது அரசாங்க இலாகாக்களில் சிங்களத்தில் கருமமாற்ற ஆரம்பித்துள்ளனர் என்பதை நாம் அறிகிறோம். இதை இன்னும் எங்கள் தமிழ்த்தலைவர்கள் உணராதவர்கள்போல் புதினப்பத்திரிகைளில் வேறுபட்ட அரசியல் கருத்துக்களையும் அறிக்கைளையும் வெளியிடுவதால் யாதொருபயனுமில்லை. இதனல் எங்கள் ஒற்றுமையின்மையையும் பலவினத்தையும் நாம் எங்கள் அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டுகின்றோம். எனவே முதலில் தமிழ்த் தலைவர்கள் தங்கள் கட்சி வேறுபாடுகளை ஒழித்து ஒன்றுபட்டு செயலாற்ற முற்பட வேண்டும். தமிழ்த் தலைவர்களிடையே கட்சி ரீதியிலோ அன்றேல் கொள்கை ரீதியிலோ ஒற்றுமை வேற்றுமை இருக்கலாம். ஆனல் தமிழ் மொழியும் அரசகருமமொழியாக வேண்டும் என்ற இலட்சியத்தில் ஒன்றுபட்டவர்களாக இருக்க வேண்டும்.

மாறுபட்ட அரசியல் கட்சிகளான சமசமாஜி, கம்யூனிஸ்ட், மக்கள் ஐக்கிய முன்னணி, ஆகியன இடதுசாரி ஒற்றுமை முன்னணிஅமைக்கும் பொழுது எங்கள் தமிழ்த் தலைவர்களான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. சி. சுந்தரலிங்கம் போன்றவர்களும் மற்றும் பிரமுகர்களும் சேர்ந்து ஏன் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்க முடியாது? இதற்கு இன்னும் காலம் கிடைவில்லையா?

சு. திருநாவுக்கரசு.
ஆனைக்கோட்டை.

---

## 'அகத்தின் தெய்வீகத்தூண்டுதலே சாதனை'

கிளிநொச்சி, செவ்வாய்

'சாதனைகள் அனைத்தும் அகத்தின் தெய்வீகத்தைத் தூண்டுவனவாய் அமைந்தாலன்றி அவை பயன்தரமாட்டாது. ஒவ்வொருவரும் தம்மில் தெய்வீக அருள் நிறைந்திருப்பதனை உணர்ந்து கொள்ளவேண்டும்' என்று கிளிநொச்சித் திருநெறிக்கழகக் காரியதரிசி திரு. த. நல்லதம்பி கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனையில் பேசும்போது கூறினர்.

வெள்ளிக் கிழமைகளில் இவ் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

---

## யோகசாதனை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் மாணவர் மத்தியில் யோகசாதனைகள் பற்றி யோகாசன ஆசிரியர் திரு. எம். ஏ. மணி விரிவுரை நிகழ்த்தியதுடன், யோகாப்பியாசங்களையுக் செய்து காண்பித்தார். இம் கூட்டத்திற்கு திரு. ஆர். குமாரசாமி தலைமைவகித்தார்.

---

## 7 மாணவர் பிணையில் அனுமதி

கொழும்பு, செவ்வாய்

நாரன்பிட்டியாவைச் சேர்ந்த இரு பாடசாலை மாணவர்களைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைதுசெய்யப்பட்ட ரோயல் கல்லூரியைச் சேர்ந்த 7 மாணவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

இந்த மாணவர்களால் உபயோகிக்கப்பட்ட வானில் இரும்புக் கம்பிகளும் வேறு சில ஆயுதங்களும் இருக்கக் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரோயல் கல்லூரிக்கும் சென். தோமஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியின்போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 'இரண்டு கால் எலிகள் விரட்டப்பட்டுவிட்டன'

மீரிகம, செவ்வாய்

"1960-ம் வருடத்திலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திலுள்ள இரண்டு கால் எலிகள் விரட்டப்பட்டு விட்டன" என்று உணவு, வர்த்தக, கப்பல், போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கிளை ஒன்றின் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

திவுலபிட்டியா எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி கிளையை ஆரம்பித்த பின்னர் பேசிய மந்திரி மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் 30 வருட சரித்திரத்தைக் கொண்டுள்ளபோதிலும் பொருள்களெல்லாவற்றையும் இன்னும் விநியோகிக்க முடியவில்லை.

1962-ம் வருடம் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவு மற்ற வருடங்களை விட அதிகம் என்றே கூறவேண்டும். முன்னர்போலில்லாது எந்த நாட்டுக்கும் நாம் இப்பொழுது தேயிலையை விற்பனவு செய்யலாம். இது வெளிநாட்டுச் செலாவணியை மேலும் சேகரிக்க உதவியாகவிருக்கும்.

---

## களனி வெள்ளத்தடுப்பு

### 4 அம்சத் திட்டம்

கொழும்பு, செவ்வாய்

களனி கங்கையினல் ஏற்படும் வெள்ளச் சேதத்தைத் தடைசெய்ய அரசாங்கம் 4 அம்சத் திட்டமொன்றை ஆராய்ந்துவருகிறது.

இது குறித்து அரசாங்கத்துக்கு ஆலோசனை தெரிவித்திருந்த ரஷ்ய நிபுணர்களின் கருத்துக்கமையவே இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

வெள்ளத் தடுப்பை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நான்கு அம்சத் திட்டத்தில் ஆற்று அணைகளைத் திருத்திப் புதிதாக அமைப்பதோடு வெள்ளத்தை வடமத்திய மாகாணத்துக்குத் திருப்பி விடவும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இவ்வித திட்டத்தினல் 140,000 ஏக்கர் நிலத்துக்கு மேலதிகமாக நீர் பாய்ச்ச முடியும் எனக் கருதப்படுகிறது.

களனி வெள்ளப் பெருக்கால் வருடாவருடம் 5,000 மக்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது.

# பாதைகள் அகலப்படுத்துவதில் பாகிஸ்தான் நடவடிக்கை

## திரிபுராவைச் சுற்றி ராணுவ லொறிகள் செல்ல ஏற்பாடு

அகர்தாலா, ஏப்ரல் 9

இராணுவ லொறிகள் செல்வதற்கு வசதியாக கிழக்குப் பாகிஸ்தானில், திரிபுராவைச் சுற்றியுள்ள சில பகுதிகளில் குறுகிய பாதைகளை பாகிஸ்தான் அகலப்படுத்திவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1962-ம் வருடம் செப்டம்பரில் ஏற்பட்ட இந்திய-பாகிஸ்தான் உடன்பாட்டை மீறி சாப்ரூம் டவுனுக்கு எதிரே பெனி நதியில் பாகிஸ்தான் மீண்டும் சுவர்களை எழுப்புவதாக நம்பப்படுகிறது. திரிபுராவுக்கும் கிழக்குப் பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள தகராறுக்கிடமான சில பகுதிகளில் ரோந்து நடவடிக்கையையும் பாகிஸ்தான் ஆரம்பித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளைக் குறித்து பலத்த ஆட்சேபத்தை திரிபுரா அரசாங்கம் கிழக்கு பாகிஸ்தான் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

கால்நடைகளைக் கடத்திச் செல்லும் பாகிஸ்தானிய ஆயுத கோஷ்டி ஒன்று ஏப்ரல் 4-ல் திரிபுராவில் அத்துமீறிப் பிரவேசித்ததாகவு ஆனல் இந்திய ரோந்துக்கோஷ்டி வந்ததும் ஓடிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிய ஆயுதக்கோஷ்டியினரை ஒருதடவை கிராமவாசிகள் எதிர்த்தபோது அவர்களைப் பலமாகத் தாக்கி பக்கத்திலிருந்த மரத்தில்கட்டி வைத்ததாகவும் இந்திய ரோந்துப்படையினர் குறிப்பிட்ட இடத்துக்கு வந்தபோது பாகிஸ்தானிய ஆயுதகோஷ்டியினர் ஓடிவிட்டதாகவும் தகவல்தெரிவிக்கப்பட்டுள்வது.

---

## சீக்கிய குடும்பம் சிங்கப்பூரில் கொலை

சிங்கப்பூர், ஏப். 9

சீக்கிய குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சென்றசனிக்கிழமை காலை சித்திரவதை செய்யப்பட்டுக்கிடந்தனர். இங்கு கட்டிடம்கட்டும்மனையில் காவல்காரரான சஞ்சல்சிங், அவரது மனைவி குருநாம்கௌர், அவர்களுடைய 20 வயது மகன் ஹர்பான்சிங் பாதி கட்டப்பட்ட கட்டடத்துக்கருகில் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். இப்பாதிக் கட்டடத்தில்தான் இக்குடும்பம் குடியிருந்தது. காவல்காரர் சஞ்சல்சிங்கின் கைகள் பின்புறத்தில் கட்டப்பட்டிருந்தன. அவரது மனைவி, மகன் இருவரது கழுத்துக்களும் வெட்டுண்டு கிடந்தன. படுகொலைக்குத் தப்பிய மற்ற மூன்று குழந்தைகளும் சமுக நல இலாகாவின் பாதுகாப்பில் இருக்கின்றன.

சடலங்கள் கிடந்த இடத்தில் சண்டை நடந்ததற்கான அடையாளங்கள் காணப்பட்டன. மேசை, நாற்காலி, பீரோ போன்றவை அலங்கோலமாகக்கிடந்தன. பொலிஸ் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது. இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

---

## அணுக்கதிரியக்க ஆராய்ச்சி

லண்டன், ஏப். 7

பிரிட்டனில் எடின்பரோவில் உள்ள மேற்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில் வைத்திய ஆராய்ச்சிக் கவுன்சிலின் அணுக்கதிரியக்க ஆராய்ச்சிப் பிரிவுக்காக புதிய நிலையம் கட்டப்படும். அணுக்கதிரியக்கத்தினல் மனித உடலுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் பற்றி 1956-ம் வருடத்திலிருந்தே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இந்த ஆராய்ச்சிக்கான வசதிகளை அதிகப்படுத்துவதற்காகவே ரூ. 17 லட்ச செலவில் புதிய நிலையம் கட்டப்படுகிறது.

---

## காமன்வெல்த் அமைச்சர் மாநாடு

லண்டன், ஏப். 7

மே மாதம் 13, 14-ந் திகதிகளில் நடைபெறப் போகும் காமன்வெல்த் வர்த்தக அமைச்சர்கள் மாநாட்டுக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

பிரிட்டன் ஐரோப்பியப் பொதுச்சந்தையில் சேருவதற்கான பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முறிவைப்பற்றி அமைச்சர்கள் விவாதிப்பார்கள்.

இதையடுத்துச் சில நாட்களில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் "வணிக, சங்கத் தீர்வை குறித்த பொதுவான உடன்பாட்டுக்" கூட்டத்தில் பேச்சுவார்த்தைகளை எந்த முறையில் நடத்துவது என்பது குறித்தும் அமைச்சர்கள் பேசுவார்கள்.

இந்தக் காமன்வெல்த் காட்டிற்கு, ஹாங்காங், மரீசியஸ், கீன்யா, பிரிட்டிஷ் கயானா ஆகிய காலனிகளிலிருந்தும் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

---

## எல்லைப்பகுதியில் மின்சார நிலையங்கள்

லக்னோ, ஏப். 7

உத்திர பிரதேச ராஜ்யத்தில் எல்லைப்பகுதியில் உள்ள உத்தரகண்ட் வட்டாரத்தில் புதிதாக அமைக்கப்படும் மின்சார உற்பத்தி நிலையங்கள் இந்த நிதி ஆண்டு முடிவுக்குள்ளாக அமைக்கப்பட்டுவிடும். இவற்றில் உத்தர்காசி மின்சார நிலையத்துக்கு ரூ. 12 லட்சம் செலவாகுமென்றும் சாமோலி மின்சார நிலையத்துக்கு ரூ 14 லட்சம் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பித்தோராகார் ஜில்லாவில் புதிதாக 30 திட்டங்களை மேற்கொள்ளவும், உத்தர் காசியில் 14 திட்டங்களை மேற்கொள்ளவும் சர்வே நடத்துமாறு ராஜ்ய மின்சார போர்டு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

---

## வடநாட்டில் தமிழ் கற்க ஆர்வம்

சிதம்பரம், ஏப்ரல் 9

வடநாட்டினர் தமிழ் கற்றுக்கொள்வதற்கு முறைப்படி பாடப் புத்தகங்களைத் தயாரிக்கவேண்டுவது அவசியமென்று பிரபல தமிழ் அறிஞர் ஸ்ரீ என். முருகேச முதலியார் தெரிவித்துள்ளார்.

வடநாட்டினர் மட்டுமின்றி, மேனாட்டினருக்கும் இப்பாடப் புத்தகங்கள் பயன்படவேண்டும். பேச்சுத் தமிழ் பழக்கமாவதற்கும், கிராமபோன் தட்டுகள், டேப் ரிகார்டுகளில் தகுந்த பேசும் பாடங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று ஸ்ரீ முதலியார் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வட இந்திய நகரங்களிலுள்ள இளம் சந்ததிகள் தென் மொழி கற்பதில் காட்டும் ஆர்வத்தை சுட்டிக்காட்டி, அந்நகரங்களில் உத்தர பாரத் திராவிட பாஷா பிரசார சபை நிறுவவேண்டுமென அவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

---

## கனடா விமானங்களுக்கு கிராக்கி

லண்டன், ஏப். 7

கனடாவில் உள்ள டிஹாவிலாண்ட் விமானக் கம்பெனியார் தயாரித்துவரும் பல்வேறு வகை விமானங்களுக்கு உலக நாடுகளில் நல்ல கிராக்கி உள்ளது.

இக்கம்பெனி தயாரிக்கும் பீவர், ஓட்டெர், கரிபோ ஆகிய ரக விமானங்கள் இதுவரை இரண்டாயிரத்துக்கும் அதிகமாக விற்பனையாகியுள்ளன. பீவர் ரக விமானம்மட்டும் 62 நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காமட்டும் 968 பீவர் ரக விமானங்களை வாங்கியுள்ளது. பீவர் விமானத்தில் 7 பேர் ஏறிச் செல்லலாம். பெரிய வடிவில் உள்ள ஓட்டெர் விமானத்திலோ 11 பேர் ஏறிச் செல்லலாம். அல்லது ஒரு டன் சரக்கை ஏற்றிச் செல்லலாம்.

இரு என்ஜின்களைக்கொண்ட கரிபோ விமானத்தில் அதிகப்பட்சமாக 30 பேர் ஏறிச் செல்லலாம். ஏற்கனவே 34 கரிபோ விமானங்களை வாங்கிய அமெரிக்க ராணுவ இலாகா சமீபத்தில் மேலும் 53 கரிபோ விமானங்களை வாங்கியுள்ளது.

---

## பிரிட்டனில் டாக்டர்களுக்கு சம்பள உயர்வு

லண்டன், ஏப்ரல் 5

பிரிட்டனில் பல் டாக்டர்கள், ஆஸ்பத்திரி டாக்டர்கள், குடும்ப டாக்டர்கள் ஆகிய அனைவருக்கும் சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இது மாதத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ளது.

இதன்மூலம் டாக்டர்களுக்கு அவர்களது வருமானத்தில் 14 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பள உயர்வுத் திட்டத்தினல் 23 ஆயிரம் குடும்ப டாக்டர்கள் பலன் அடைவார்கள். தேசிய வைத்திய உதவித் திட்டத்தின் கீழ் பிரிட்டனில் வருடத்துக்கு ரூ. 1266 கோடி செலவிடப்படுகிறது. இப்போது அளிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வினல் அதிகப்படியாக சுமார் 2 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவாகும். தேசிய வைத்திய உதவித் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பாக பிரிட்டனில் ஒரு குடும்ப டாக்டரின் சராசரி வருமானம் வருடத்துக்கு ரூ. 13 ஆயிரமாக இருந்தது. இந்த வருடத்தில் இது சுமார் ரூ. 36 ஆயிரத்துக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

---

## பசிபிக் கடலைக் கடந்த விமானி மரணம்

நியூயோர்க், ஏப். 7

பசிபிக் பெருங் கடலைக் கடந்த முதல் சிவிலியன் விமானியான எர்னி ஸ்மித் தமது 70 வது வயதில் இப்போது காலமானர்.

இவர் 1927-ம் ஆண்டில் ஒரே என்ஜினைக் கொண்ட மானேபிளேன் விமானத்தில் ஒரு உதவியாளருடன் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவிலிருந்து கிளம்பி பசிபிக் கடலைக் கடந்து ஹாவாய் தீவில் வந்து இறங்கினர். இந்த 2393 மைல் விமானப் பயணத்தை முடிக்க அப்போது அவருக்கு 25 மணி நேரம் 36 நிமிடங்கள் பிடித்தது.

---

## லோஹியாவுடன் டாக்டர் கேஸ்கர் போட்டி

புதுடில்லி, ஏப்ரல் 9

பாருகாபாத் (உத்திரபிரதேஷ்) பார்லிமெண்ட் உப-தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக டாக்டர் பி. வி. கேஸ்கர் போட்டியிடுவார்.

இத்தொகுதியில் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் ராம் மனேகர் லோஹியா போட்டியிடுவாரென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ரோல்ஸ்ராய்ஸ் நிறுவன அதிபரின் நூற்றாண்டு விழா

லண்டன், ஏப். 7

உலகப் பிரசித்திபெற்ற ரோல்ஸ்ராய்ஸ் காரைத் தயாரிக்கும் கம்பெனியை நிறுவியவரான சர் ஹென்றி ராய்ஸின் நூறுவது பிறந்த தினத்தை ரோல்ராய்ஸ் ஸ்தாபனத்தினர் இப்போது கொண்டாடுகின்றனர். சர் ஹென்றி ராய்ஸ் 1863-ம் வருடம் வருடத்தில் மார்ச் 27-ந் திகதி பிறந்தார். அவர் 1933ல் காலமானர்.

மேற்படி ரோல்ஸ்ராய்ஸ்நிறுவனம் விமான என்ஜின்களையும் மற்றும் பல யந்திரங்களையும் தயாரிக்கிறது.

---

## பிரிட்டனில் திபெத் பற்றிப் படம்

### சீனருக்கு ஆதரவாக இருப்பதாகப் புகார்

லண்டன், ஏப்ரல் 7

சமீபத்தில் பிரிட்டிஷ் டெலிவிஷனில் திபெத்பற்றி காட்டப்பட்ட படம் கம்யூனிஸ்ட் சீனவுக்கு ஆதரவான முறையில் இருப்பதாகக் கூறி பிரிட்டனில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

"செயலில் உலகம்" என்ற வரிசையில் மேற்படி சினிமாப் படம் பிரிட்டிஷ் வர்த்தக விளம்பர பிரிவினரால் காட்டப்பட்டது.

இப்படத்துக்கு எப். ஸ்பென்சர் சாப்மன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இவர்பிரிட்டனில் சஸெக்ஸ் பகுதியில் திபெத்திய அகதிக் குழந்தைகளுக்குப் புகலிடம் தந்துள்ள பெஸ்டாலோசி சிறுவர் கிராமத்திற்கு வார்டனக இருப்பவர். தலாய் லாமாவின் விருப்பப்படி இங்கு திபெத்திய அகதிக் குழந்தைகள் தங்கிப்படிக்கின்றனர்.

மேற்படி சினிமாப் படத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாப்மன் "டெய்லி டெலிகிராப்" பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். "சீன படையெடுப்புக்கு முன்பாக திபெத்தில் இருந்த அரசாங்கத்துக்கு எதிரானவகையில் இந்தப்படம் உள்ளது. சீனர்கள் திபெத்திய மக்களுக்கு நன்மைகளைச் செய்துள்ளதாகக் கூறுவது போலவும் இது உள்ளது" என்று அவர் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

இதேபோல பலரும் புகார்கள் கூறியுள்ளார்கள். இந்த டெலிவிஷன் காட்சியைக் கண்டவரும் திபெத்திய விவகாரங்கள்பற்றி ஓரளவு அறிந்தவருமான ஒருவர் கருத்துக் கூறுகையில் "சீன ஆதிக்கத்தில் திபெத் நல்லநிலையில் இருப்பதாக இப்படம் காட்டுகிறது. திபெத்தியர்களை சீனர்கள் கொன்று குவிப்பதுபற்றிக் கூறப்படும் புகார்களை இப்படம் ஒன்றுமில்லாததுபோல கேலி செய்துள்ளது" என்றார்

இப்படத்துக்கு உருப்படியான வகையில் எதிர்ப்புத் தெரிவிக்க ஏதாவது ஒரு நடவடிக்கை எடுப்பதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

---

## குருஷ்சேவின் பதவிக்கு ஆபத்து?

### பிரிட்டிஷ் பத்திரிகை தகவல்

லண்டன், ஏப்ரல் 9

ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவுக்கு எதிராகக் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாகவும் இதனல் அவரது பதவிக்கே ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளதாகவும் 'பைனன் ஆயல் டைம்ஸ்' என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை கூறுகிறது.

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மத்திய கமிட்டியின் உயர் மட்டக் குழுவிலுள்ளோர் பெருன்பான்மை அங்கத்தினர்கள் குருஷ்சேவுக்கு எதிராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

"கோஸ்பிளான்" எனப்படும் ரஷ்ய திட்டக்கமிஷனின் கூட்டத்தில் குருஷ்சேவ் கலந்துகொள்ளவில்லை என்று 'பிரவ்டா' தெரிவித்ததைத் தொடர்ந்து 'பைனன்ஷியல் டைம்ஸ்' மேற்கண்டவாறு கருத்துக் கூறியுள்ளது. குருஷ்சேவைத் தவிர மற்ற அனைவரும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. ரஷ்யாவில் மிகவும் நெருக்கடியான சூழ்நிலை உருவாகி வருவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக ரஷ்யாவிலுள்ள "பைனன்ஷியல் டைம்ஸ்" நிருபரும் தெரிவித்துள்ளதாக அப்பத்திரிகை தெரிவிக்கிறது.

---

## பிக்பாக்கட்காரரைப் பிடிக்க

### பொலிஸார் நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு புறக்கோட்டையில் பொருள்களை வாங்கும்பொழுது அவதானமாக இருக்குமாறு கொழும்பு பொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஐ. டி. எம். வாண்டுவெஸ்ட பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

பிக்பாக்கட்காரர்களின் நடமாட்டம் இந்தப்பகுதியில் அதிகமாக இருப்பதாலேயே இவ்விதம் அவதானமாக இருக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

திரு. வாண்டுவெஸ்ட் இது பற்றித் தெரிவித்துள்ளதாவது:—

புறக்கோட்டை பிக்பாக்கெட்காரர்களின் பிரதான இடம். சிங்கள—இந்து புது வருடப்பிறப்புக்காக பொருள்கள் வாங்கவரும் பொதுமக்களிடம் இவர்கள் தமது கைவரிசையைக் காட்ட எண்ணுவார்கள். இவர்கள் இவ்விதம் தமது கைவரிசைகளைக் காட்டாதவாறு தடுப்பதற்காக மேலதிகமான பொலிஸார் இந்த இடத்தில் கடமையாற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொலிஸார் இப்பகுதியை தீவிரமாகக் கண்காணித்துவருவர். இவ்வித பிக்பாக்கட் சம்பவம் ஏதும் நடைபெற்றல் அண்மையிலிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு உடன் தகவல் தெரிவிக்குமாறு பொதுமக்கள் கோரப்படுகின்றனர்.

---

## விடுமுறையை கழிக்க கல்லோயா செல்கின்றனர்

கல்லோயா, செவ்வாய்

இப்பொழுது பலர் தமது விடுமுறைகளைக் கழிப்பதற்காக கல்லோயாவுக்குச் செல்வதாகத் தெரிகிறது.

உல்லாசப் பிரயாணங்களை ஏற்பாடு செய்யும் சங்கங்கள் மேற்கண்ட விஷயத்தை வெளிப்படுத்தியுள்ளன.

அம்பாறையிலுள்ள உல்லாசவிடுதிகள் மற்றும் இங்கினியாகலை வாடிவீடு ஆகிய எல்லாவற்றிலும் பலர் தமக்கு இடம் ஒதுக்கிக் கொண்டுள்ளார்கள் எனத் தெரிய வருகிறது.

கல்லோயா அபிவிருத்திச்சபையும் இவ்வித உல்லாசப் பிரயாணிகள் தங்குவதற்கு விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஒழுங்குகள் மேற் கொண்டுள்ளது.

இங்கு படகோட்டுதல், மீன்பிடித்தல், பட்சிகளைப் பார்வையிடுதல் ஆகியபொதுழுபோக்குகளில் ஈடுபட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

---

## 'கறுப்பு நிறத்தவருக்கு தூக்கு'

### அமெரிக்காமீது ரஷ்யா குற்றச்சாட்டு

ஜெனிவா, ஏப்ரல் 9

அமெரிக்காவில் கறுப்பு நிறத்தவர்கள் பலர் தூக்கிலிடப்படுவதாக ரஷ்யா அமெரிக்கா மீது குற்றம்சுமத்தியுள்ளது.

## மணி வாக்கு

சாத்வீக எதிர்ப்பு என்பது பலமுனை கருள்ள கத்தியாகும். எப்படியும் அதைப் பாவிக்கலாம். ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல், மிகமேலான பலன்களை அளிக்கவல்லது. அது பாவிப்பவர்களையும் யாருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறதோ அவர்களையும் ஆசீர்வதிக்கும். அது துருப்பிடியாது. யாரும் அதைத் திருட முடியாது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
பங்குனி மீ 28 உ (-10-4-63)

## வித்தியோதயாவில் தமிழ்மொழி

தென் இலங்கையிலே வித்யோதயா சர்வகலாசாலையில் தமிழையும் ஒரு பாடமாகக் கற்பிக்க ஒழுங்குகள் நடைபெறுகின்றனவாம். இதற்காக அந்த ஸ்தாபன நிர்வாகிகளை நாம் பாராட்டுகிறேம். அதன் நிர்வாகசபையிலே சிங்கள சமூகத்தவரே அதிகம். என்றாலும் அவர்கள் இந்நாட்டிலே தமிழ்மொழியின் முக்கியத்தை உணர்ந்து இத்தீர்மானம் செய்திருப்பது வரவேற்கத் தக்கது.

குறுகிய மொழி வெறியை சில அரசியல்வாதிகள்கிளப்பி விட்டு, நாட்டு மக்களிடையே இருந்த ஒற்றுமையையும் நல்லுறவையும் கெடுத்துவிட்ட இந்நிலையில், சிங்களம் மட்டும் என்ற கொள்கையை அரசாங்கம் கைக்கொண்டு வருகையில், மேற்குறித்த சர்வகலாசாலை நிர்வாகிகள் தமிழுக்கும் அங்கு இடம் அளித்துள்ளது துணிச்சலான நல்ல நடவடிக்கையாகும். சிங்களவர்களிடையே நல்லெண்ணமும் நேர்மையுமுள்ளவர்கள் இருக்கின்றார்கள் என்பதற்கு இது தக்க அத்தாட்சியாகும்.

இவ்வித நடவடிக்கை, மொழிச் சிக்கலை சுமுகமாகத் தீர்க்க நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்த உதவும். மொழிச் சிக்கல்தான் நாட்டின் ஒற்றுமையைக் குலைத்து மனக்கசப்பை வளர்த்து வருவதாக உள்ளது. தமிழுக்கு உரிய அந்தஸ்தை அளிக்க மறுப்பதால், நாட்டிலே தமிழ்ப்பேசும் மக்கள் அனைவருமே மனவேதனை அடைந்துள்ளனர். ஏழு வருடங்களுக்கு முன்பாக, இந்நாட்டில் தமிழும் ஓர் அரசாங்க மொழியாக இருந்துவந்தது. திடீரெனப் பெருப்பான்மை வாக்குப்பலத்தால், 'சிங்களம்' மட்டும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டபின், தமிழ் பேசும் சமூகத்தினர், சிங்கள சமூகத்தின்பாலும், இந்த ஜனநாயக ஆட்சி முறையிலுமே நம்பிக்கை இழந்ததுடன், இந்நாட்டில் தாங்கள் இனி மானத்துடன் வாழமுடியுமென்ற நம்பிக்கையையும் வெகுவாக இழக்கலாயினர்.

இந்நிலையில், வித்தியோதயா சர்வகலாசாலை, தமிழுக்கும் அங்கீகாரமளித்து, அதை ஒரு பாடமாகச் சேர்க்க முன்வந்தது சிறப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு புதிய ஆறுதல் அளிப்பதாகும். வித்தியோதயா காட்டியுள்ள இந்த மேலான வழியை யாரும் எதிர்க்காதது குறிப்பிடத்தக்கது. இதனல் இனி மொழிச் சிக்கல் சுமுகமாகத் தீர சிங்கள அரசியல் வாதிகளும் அதிக துணிச்சலுடன் முன்வந்து, தமிழ்மொழிக்குத் தக்க உரிமை வழங்க முன்வருவரென்றும், மொழிச்சிக்கல் வெகுவாகத் தீருமென்றும் நம்புவோம்.

## கிழக்கு மாகாணத்தில்

கிழக்கு மாகாணத்திலே இன்று அரசாங்க உதவியுடன் சிங்களவர்களைக் குடியேற்றும் மாதிரியைக் கவனிக்கையில், தமிழ்ப் பேசும்மக்களை அங்கு சிறுபான்மையினராக்கிவிடக் கூடியதாக இருக்கிறதென்று வவனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பொதுக்கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கவலையுடன் தெரிவித்தார். இவ்வித பீதி அக்கட்சியினருக்கு மட்டுமன்றி, பொதுவாக அப்பகுதியிலுள்ள தமிழ்ப்பேசும் மக்கள் அனைவருக்கும் உண்டு.

இதேசமயம், திருக்கோணமலையைச் சேர்ந்த பல ஊர்களின் தமிழ்ப்பெயர்களையும் சிங்களப் பெயர்களாக மாற்ற யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதைக்கேட்க, இந்தப் பீதி பலப்பட்டு அதிகமாகவும் செய்யும். வட்டிக்குளம், பத்துமேற்கு, மேதகச்சி, அடம்பனை, புலிகண்டிக்குளம், குட்டிகுளம், நாவற்குளம், நீராவெளி, கந்தளாய் முதலிய ஊர்களுக்கு ஆதிகாலம் தொட்டு இத்தமிழ்ப் பெயர்கள் வழங்கி வருகையில், அவற்றைத் திடீரென அம்மாகாணமக்களின் சம்மதமின்றி சிங்களப்பெயர்களாக மாற்றச் செய்யும் முயற்சி எவ்விதத்திலும் தகாது.

அப்பகுதியைச் சேர்ந்த சில பார்லிமெண்ட் மெம்பர்களை பிரதமர் சென்றவாரம் அழைத்துப் பேசியதாக ஒரு செய்தி தெரிவித்தது. அப்பேச்சுகளில் இவ்விஷயமும் இடம் பெற்றதோ என்பது தெரியவில்லை. என்றாலும் இது அம்மாகாணத்தில் தொன்றுதொட்டு வாழும் மக்களின் நலஉரிமையைப் பாதிக்கக்கூடிய விஷயம். ஒரு கட்சி விஷயமல்ல. ஆகவே இதுபற்றியும் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒருமுகமாக, அரசாங்கத்துக்கு, இவ்விஷயமாக மக்களின் பீதியையும் கவலையையும் தெரிவித்து, நிலையை மோசமாகாதபடி தக்கமுயற்சி செய்யவேண்டியது அவர்களது கடமையாகும்.

## 'வாலிபர்கள்கையில் எதிர்காலம்'

சாவகச்சேரி, செவ்வாய்

'எதிர்காலம் வாலிபர்களின் கையிலேதான் தங்கியுள்ளது எல்லோரும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையக்கூடிய சுபிட்சமான வழியையே கையாள வேண்டும்' என்று நீச்சல்வீரர் ஆனந்தன் தென்மராட்சி சமாதான முற்போக்கு வாலிபர் சங்க ஆதரவில் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

மீசாலை தெற்கு சமாதான நிலையத்தில் திரு. ஏ. சாம்பசிவமூர்த்தி தலைமையில் இப்பாராட்டு விழா நடைபெற்றது. ஆனந்தனின் வீரச் செயலைப் பாராட்டி திருவாளர்கள் டி. குருதாஸ், எஸ். வி. நடராசா, வித்துவான் மு. சபாரத்தினம், டொமினிக் ஜீவா, க. சந்திரசேகரம் ஆகியோருட்பட பலர் பேசினர். திரு. எஸ். வி. கந்தசாமி நன்றியுரை கூறினர். செல்வி செல்வரத்தினம் வலுப்பிள்ளையின் இன்னிசை கச்சேரியும் நடைபெற்றது.

# இந்திய ஜனாதிபதியின் லண்டன் விஜயம்

## ராஜ வரவேற்பு அளிக்கப்படும்

லண்டன், ஏப்ரல் 9

இங்கியாவின் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன இவ்வாண்டு கோடையில் பிரிட்டனுக்கு விஜயம்செய்து பிரிட்டிஷ் அரசியின் விருந்தினராகத் தங்குவார். இவரது விஜயம் மிகவும் கோலாகலமானதாகவும், சிறப்பு மிக்கதாகவும் இருக்கும்.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று குடியரசாய மாறியபிறகும்கூட தொடர்ந்து காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் இந்தியாவின் குடியரசுத் தலைவர் பிரிட்டனுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும் என்பதால் டாக்டர் ராதாகிருஷ்ணனின் விஜயம் குறிப்பிடத் தக்கதாக அமைந்துள்ளது.

இந்தியாவைப்போலவே காமன் வெல்த்தில் தொடர்ந்து அங்கம்வகிக்கும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் இவ்வாண்டு கோடையில் பிரிட்டனுக்கு விஜயம்செய்து பிரிட்டிஷ் அரசியின் விருந்தினராகத் தங்குவார்.

பிரிட்டனுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் விஜயம்செய்யும் போது பிரிட்டிஷ் அரசியின் பக்கிங்காம் மாளிகையை அடுத்துள்ள சிறப்புமிக்க "பெல்ஜியன் இல்லம்" என அழைக்கப்படும் விருந்தினர் மாளிகையில் தங்குவார். அரசியின் விருந்தினர்களாக வரும் வெளிநாட்டு அதிபர்கள் பிரிட்டனுக்கு விஜயம் செய்தால் இந்த மாளிகையில்தான் தங்கிவதுவழக்கம். கடந்த 100 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் பிரிட்டனுக்கு விஜயம் செய்த வெளிநாட்டு மன்னர்கள், சக்கரவர்த்திகள், ஜனாதிபதிகள் ஆகியோர் இந்த மாளிகையில்தான் தங்கினர். இப்போது முதல்தடவையாக இந்தியக் குடியரசுத்தலைவர் இந்த மாளிகையில் தங்கஇருக்கிறார்.

இந்த பெல்ஜியன் இல்லமானது கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாலாம் ஜார்ஜ மன்னர் காலத்தில் அவரது உபயோகத்திற்காகக் கட்டப்பட்டது. பின்னர் அது "விருந்தினர் மாளிகை"யாகமாறியது. 1837-ம் ஆண்டில் விக்டோரியா மகாராணியார் பட்டத்திற்குவந்தபோது பெல்ஜிது மன்னரான லியோபோல்ட் அடிக்கடி பிரிட்டனுக்கு விஜயம் செய்து வந்தார். அதிக தடபுடலின்றி பெல்ஜிய மன்னர் அவர் விரும்பியபோதெல்லாம் வந்து தங்கிப்போவதற்காக இந்த மாளிகையை அவருக்காகவே விக்டோரியா மகாராணியார் ஒதுக்கினர். இதைத் தொடர்ந்தே இந்த மாளிகைக்கு "பெல்ஜியன் இல்லம்" என்று பெயர் ஏற்பட்டது.

இந்த விருந்தினர் மாளிகையானது பிரிட்டிஷ் அரசியாரின்பக்கிங்காம் மாளிகையின் வடமேற்குப் புறத்தில் கீழ்த்தளத்திலேயே அமைந்துள்ளது. இ ஒன்றுக்கொன்று தொடர்புகொண்ட 7 அறைகளைக் கொண்டதாகும்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் காலத்திலிருந்து வெளிநாட்டுத் தலைவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்புவைபவங்கள் ஏறக்குறைய ஒரே பாணியில் இருந்துவருகின்றன. இந்த வைபவங்கள் கண்கவரும் கோலாகல நிகழ்ச்சிகளாக அமைந்துள்ள காரணத்தால் லண்டன் வாசிகள் இவற்றைக் கண்டுகளிக்க பெரிதும் விரும்புகின்றனர்.

விருந்தினர்களாக விஜயம் செய்யும் வெளிநாட்டு அதிபர்கள் சாதாரணமாக 3 நாட்களுக்கு பிரிட்டிஷ் அரசியாரின் விருந்தினர்களாக தங்குவார்கள். வெளிநாட்டுத் தலைவர்கள் கப்பல்மூலம் வந்தாலோ அல்லது விமானமூலம் வந்தாலோ அவர்கள் வந்திறங்கும் இடத்தில் அவர்களுக்கு பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரில் முக்கியமானவர்களில் ஒருவர் நேரில் சென்றுவரவேற்பு அளிப்பார். இதன் பிறகு அவர்கள் லண்டன் நகருக்கு வந்து சேர்ந்ததும் பிரிட்டிஷ் அரசியாரும், மென் எடின்பரோ கோமகனும், நேரில் வரவேற்பு அளிப்பார்கள். இதில் பிரிட்டிஷ் பிரதமரும் மற்றும் அரசாங்கத் தலைவர்களும் பங்கு கொள்வார்கள்.

அங்கு வெளிநாட்டுத் தலைவருக்கு சிவப்பு நிற உடுப்பும், கரடித் தோலினல் ஆன தொப்பியும் அணிந்த காவலாளர்கள் அணிவகுப்பு மரியாதை அளிப்பார்கள். பின்னர் அங்கிருந்து மாளிகைக்கு அலங்கார பவனி ஆரம்பமாகும். காலநிலை நன்ருக இருந்தால் உயர் ஜாதிக் குதிரைகள் பூட்டப்பட்ட திறந்த அலங்கார கோச் வண்டியில் இந்த பவனி நடைபெறும். இந்தப் பவனியின் போது அரசியின் மாளிகையைச் சேர்ந்த குதிரைப்படையினர் முன்னும் பின்னுமாக அணிவகுத்துச்செல்வர். பவனி நடைபெறும் ரோடுகளில் இருபுறங்களிலும் மிடுக்காக உடை அணிந்த ராணுவத்தினர் அணிவகுத்து நிற்பர்.

அன்று மாலையில் ராஜாங்க விருந்து நடத்தப்படும் இந்த விருந்து அரசியின் மாளிகையில் அலங்கார கண்ணாடிச்சர விளக்குகளைக்கொண்ட விருந்து மண்டபத்தில் நடைபெறும். இந்த விருந்தின் போது விஜயம்செய்யும் வெளிநாட்டுத் தலைவர் அரசியின் வலப்புறத்தில் வீற்றிருப்பார். இந்த விருந்துக்காக பிரசித்தி பெற்ற தங்கத் தாம்பாளமும் மற்றும் விலை உயர்ந்த பீங்கான் பாத்திரங்களும் பயன்படுத்தப்படும்.

ராஜாங்க விருந்துக்கு அடுத்தபடியாக உள்ள முக்கிய நிகழ்ச்சி லண்டன் மேயர் அளிக்கும் உபசரிப்பில் கலந்து கொள்வதற்காக செல்லும் பவனி ஆகும். இந்தப் பவனியின்போது லண்டன் வாசிகள் ராஜாங்க விருந்ினரை மிகவும் சமீபமாக இருந்து பார்க்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இந்தப்பவனி ஒரு கோலாகல வைபவமாக நடைபெறும். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் செல்லும் ராஜாங்க விருந்தினர் 4 குதிரைகள் பூட்டப்பட்ட திறந்த அலங்கார கோச் வண்டியில் பவனி செல்வார். அப்போது அரசிமாளிகையைச் சேர்ந்த 20 குதிரைப்படை வீரர்கள் அலங்காரமாக அணிவகுத்துச் செல்வர். மாளிகையிலிருந்து புறப்படும் இந்த அலங்கார பவனி, மால்வழியாகச் செல்லும். அப்போது சற்றுத் தூரம்வரை ரோட்டின் இருபுறங்களிலும் விஜயம் செய்யும் ராஜாங்க விருந்தினரின் நாட்டினுடைய சின்னத்தையும், தேசியக்கொடியையும் ஏந்திய

(8-ம் பக்கம் பார்க்க )

## ஜயாறன் எழுதுவது

ஆவளிபுரம் கிராமசபை எல்லைக்குள்ளாக "நடமாடும் சினிமா"வினால், மக்களுக்குப் பல கேடுகள் ஏற்பட்டுள்ளதாக அவ்வூரைச் சேர்ந்த ஓர் அன்பர் நீண்ட கடிதம் எழுதியுள்ளார்.

இதனல், அங்கு பொது வாழ்வின் அமைதி கெட்டிருப்பதாயும், ஒரே நாளில் 6 கொலைகள் நடைபெற்றுள்ளதுடன் கோவில் வீதி அசுத்தமாகி புனிதம் கெட்டுவருவதாயும், மக்களின் பணமும் விரையமாகிவருவதாயும், பெண்களின் கெறிக்கும் ஆபத்து ஏற்படலாமென்றும் கூறி, அந்த சினிமா சாலைக்கு வழங்கிய அனுமதிப் பத்திரத்தை கிராம வாழ்க்கையின் பெருநோக்கை முன்னிட்டு உடன் வாபஸ் வாங்கிவிட வேண்டுமென்றும், இதுபற்றி நாற்றுக்கணக்கானவர் கையொப்பமிட்ட மகஜர் அனுப்பப்பட்டுள்ளதாயும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

* * *

சினிமாவுக்குப் போகாதே என்று ராஜாஜி முன்னர் கண்டியாகக் கத்தினர். ஆனல் கூட்டம் இன்னும் அதிகமாகப் போகிறதேயன்றி, சற்றும் குறையக்காணேம். 'கியூ' வரிசைகள் ஒவ்வொரு படச்சாலைக்கு முன்பும் நீண்டுவருகிறது.

மேலை நாடுகளிலே பல வாரங்களுக்கு முன்பாகவே, சினிமா சீட்டுகளை வாங்கி, 'புக்' செய்யவேண்டுமாம். இல்லாவிட்டால் டிக்கெட் கிடையாது. சினிமாவில் அவ்வளவு ஆர்வம். காரணம் மக்களுக்கு மன ஆறுதலுக்கும், பொழுது போக்குக்கும் வேறு வழி இல்லாததுதான் என்று ஓர் அன்பர் கூறுகின்றார். உலகப் போக்கு இப்படி இருக்கையில், இங்கு நாம் இதைத் தடுக்க முடியுமா?

சினிமாப் படங்களில் நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு. நல்ல படங்களையே பிடித்து, அவற்றையே காட்டினல் மிக நல்லது. ஆனல் நல்ல படம் பிடித்தால் பணவருவல் ஆகாதென்று கூடாத காட்சிகளையே பெரிதும் பிடித்துக் காட்டுகிறர்கள். என்ன செய்வது?

* * *

சென்றதிங்களன்று வண்ணை சிவன்கோவிலில் பூங்காவனம். அம்மன் தபஸ். முன்புறமண்டபத்தை வெகு அழகாக சிங்காரித்திருந்தனர். உயரிய மேளம். புஷ்பப் பல்லக்கிலே சுவாமி, அம்மன் அலங்காரம் கண்ணையும் மனதையும் கவர்ந்தன. கூட்டம் இரவு 1 மணி வரை அசையவில்லையாம். தமிழ்நாட்டின் பல கோவில்களைப்பற்றிய கதைகளையும், படமாகப்பிடித்து நம் கோவில்களில் இலவசமாகக் காட்டினல், கூட்டம் தாங்குமா? அது மேலான சமயப்பிரசாரமாகவும், தெய்வ பக்தியை வளர்ப்பதாகவும், மக்களுக்கு நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கும். மக்களிடையே தெய்வ பக்திக்குக் குறைவில்லை. நவீன விஞ்ஞான வசதிகளை, கோவில் மூலம் பயன்படுத்துவதாயின் பல பல சமூகசேவைகளையும் கோவில்மூலம் செய்வதாயின், ஊரும் நாடும் எவ்வளவு சுபிட்சமாகவும் செழிப்பாகவுமிருக்கும்!

* * *

சிந்தையாய் நின்ற சிவனே போற்றி, சீர்ப்பருஞ் சிந்தை செய்தாய் போற்றி, புந்தியாய்ப் புண்டரிகத்துள்ளாய் போற்றி புண்ணியனே போற்றி புனிதா போற்றி, சந்தியா நின்ற சதுரா போற்றி தத்துவனே போற்றி வென்தாதாய் போற்றி, அந்தியாய் நின்ற அரனே போற்றி அதிகை வீரட்டத்தான்வாய் போற்றி

— திருநாவுக்கரசர்.

# இரணைதீவு வழக்கில் தமிழில் விசாரணை

## மொழிபெயர்ப்பாளர் உதவியை ஜி. ஜி. மறுத்தார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் நேற்றுக்காலை இரணைதீவு கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காயமடைந்த மார்சலீனை எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்கு விசாரணை செய்தார்.

ஜி. ஜி. யின் குறுக்குவிசாரணையைப் பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர். ஜி. ஜி. தமிழில் குறுக்குவிசாரணை செய்தபோது முதலியார் பலதடவை குறுக்கிட்டபடியால், தான் தமிழில் குறுக்கு விசாரணை செய்வதாகவும், தனக்கு முதலியாரின் உதவி அவசியமில்லையென்றும் நீதிபதியிடம் ஜி. ஜி. கூறினார். அதன்பின் முதலியாரின் தலையிடு நீதிபதியால் நிறுத்திவைக்கப்பட்டது. நீதிபதியும் இடையிடையே சாட்சியை தமிழில் கேள்விகள் கேட்டார். தமிழில் விசாரணை நடந்தபடியால் ஜனங்கள் மிகவும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் திகதி சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், இரணை தீவைச் சேர்ந்த அந்தோனிஅப்பு என்பவரைக் கொலை செய்ததாகவும், வைத்திமார்சலீன் என்பவரைக் கொலைசெய்ய எத்தனித்ததாகவும் சின்னையா மயில்வாகனம், சின்னையா கந்தசாமி ஆகியோர்மீதும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. டி. கணேசலிங்கத்தின் உதவியுடனும், திரு. செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார். வழக்காளி தரப்பில் யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. எஸ். மரியநாயகம் ஆஜரானார்.

காயமடைந்த வைத்தி மார்சலீன் நடக்க முடியாத காரணத்தால் அவரை கோர்ட்டிற்குள் தூக்கி வந்தார்கள். வைத்தி மார்சலீன் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

எனக்குத் தலையில் வெடி விழுந்தது ஞாபகமிருக்கிறது. தைமாதம் 20-ம் திகதி கோவிலில் பெருநாள் நடந்தது. ஏராளமான ஜனங்கள் கோவிலுக்கு வந்திருந்தார்கள். சுழிபுரம் ஆட்களுக்கும் எங்களுடைய ஆட்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடந்தது. சுவாமியார் தலையிட்டு சமாதானம் செய்துவைத்தார். பூசை முடிந்ததும் நாங்கள் சழிபுரத்தாரை அடித்துக் கலைத்தோம். அதன்பின் நான் வீட்டுக்குப்போய்விட்டேன். மறுநாள்காலை 8 மணிக்கு கோவிலுக்கு பந்தல்போடும் கம்பு கொடுக்கப்போனேன். ஜேக்கப், வியந்தி, முத்திரியம் அந்தோனி, வயித்திசடோமன் ஆகியோருடன் போனேன். சின்னவி கந்தசாமியும், சின்னவி மயில்வாகனமும் கையில் துவக்குடன் எதிரே வந்து கொண்டிருந்தார்கள். இருவர் கையிலும் துவக்கு இருந்தது. மயில்வாகனம அந்தோனிக்கு வெடிவைத்ததும், அவர் ஓடிப்போய் கீழே விழுந்தார். வெடிவைத்ததூரம் 75 அடி இருக்கும். இரு எதிரிகளும் அடுத்தடுத்துச் சுட்டார்கள், நான் ஓடவில்லை. நான் மயக்கமடைந்துவிட்டேன். அதன்பின் நடந்தது தெரியாது. 'அன்று விதானையாருக்கு வாக்குமூலம் அளித்தது எனக்கு ஞாபகமில்லை. ஆஸ்பத்திரியில் அறிவு வந்தபின்தான் அதைப்பற்றித் தெரியும். எதிரிகளை எனக்கு நன்றாகத் தெரியும். என்னைப் பூநகரிக்கு கொண்டுபோனது பற்றி எனக்குத் தெரியாது.

சாட்சியை எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்கு விசாரணை செய்தார்.

ஜி. ஜி: உமக்கு எதிரிகளை எப்பொழு தொடக்கம் தெரியும்?

சாட்சி: 10 வருடகாலமாகத் தெரியும்.

ஜி. ஜி: அந்த 10 வருஷமும் அவர்கள் உம்முடன் சண்டை பிடிக்கவில்லை?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: உமக்கும் அவர்களுக்கும் கோபமில்லை?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: சாதிவித்தியாசம் காட்டப்படுவதில்லை?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: எதிரிகள் வேறுயாருடனவது சண்டைபிடித்திருக்கிறார்களா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: உங்கள் ஆட்களில் சிலபேருக்கு, சுழிபுரத்தார் வந்து உங்களுக்கு போட்டியாக தொழில் நடத்துவது விருப்பமில்லை?

சாட்சி: ஆம்

ஜி. ஜி: எதிரிகள் இந்து சமயத்தவர்களாயிருந்தும் உங்கள் கோயில் பெருநாளுக்கு வேண்டிய உதவிகளை செய்துவந்தார்கள்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: முன்பு ஒரு காலமும் கோயில் தினத்தில் குழப்படி நடக்கவில்லை?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: முதல் நாள் கோவிலில் இரண்டு பகுதியினரும் சத்தம் வைத்தார்கள்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: சுவாமி தலையீட்டால் சத்தம் நின்றது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: திருவிழாவிற்கு உங்களின் ஆட்கள் எத்தனை பேர் வந்தார்கள்?

சாட்சி: 500 பேர்வரை வந்தார்கள்.

ஜி. ஜி: அவர்களின் ஆட்கள்?

சாட்சி: 100 பேர் இருக்கும்.

ஜி. ஜி: அந்த 100 பேரில் சத்தம்வைத்தது கொஞ்சப் பேர்தான்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: அதிலும் இந்த எதிரிகள் இல்லை?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: பூசை முடிந்தபின் தான் குழப்படி நடந்தது?

சாட்சி: ஆம்.

நீதிபதி: கோயில் பூசை முடிந்ததும், நீங்கள் உங்களுக்குள் பூசை கொடுக்கத் தொடங்கி விட்டீர்கள்? (சிரிப்பு)

ஜி. ஜி: சுழிபுரத்து ஆட்களிடம் இந்த எதிரிகளில் ஒருவரிடம்தான் 'லைசென்ஸ்' துவக்கு இருக்கிறது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: பூசை முடிந்ததும் சாமியாருடன் பெரிய தீவுக்குப் போனீர்களா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: மறுநாள் பெரியதீவிலிருந்து சண்டை நடப்பதாக

ஜி. ஜி: போகும்போது வேறு துவக்கு வெடி நடந்ததா?

சாட்சி: இல்லை.


ஜி. ஜி: நீங்களும் சுடவில்லை, அவர்களும் சுடவில்லை?

சாட்சி: இல்லை,

ஜி. ஜி: எதிரிகளுக்கு எப்படி துப்பாக்கிச்சூட்டுக் காயம் வந்தது?



# மங்கையர் உலகம்



## உப்பும் இரத்த அழுத்தமும்

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே. உணவுக்கு உப்பு மிக அவசியம். ஆனால் உப்புக்கும் இரத்த அழுத்தத்திற்கும் சம்பந்தமுண்டா? உண்டு. இது இன்றைய விஞ்ஞானிகளின் பொதுவான முடிவு. இரத்த அழுத்தம் அதிகரிப்பதற்கு உப்பும் ஒரு காரணம் என்கின்றனர். உப்பில்லாப் பத்தியம், பல நோயாளிகளுக்கு இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.

உப்பை ருசி பார்க்கும் ஆராய்ச்சி ஒன்று அண்மையில் நடந்தது. ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மருத்துவ விஞ்ஞானிகள் இந்த ஆரய்ச்சியை நடத்தினர்.

உப்பு அல்லது சர்க்கரை கலந்த நீர் ஒரு கோப்பையிலும், வடிகட்டின சுத்த நீர் மூன்று கோப்பைகளிலும் ஆக ஒரு வரிசைக்கு நான்கு கோப்பைகள் வீதம் பல வரிசைகள் வைக்கப்பட்டன. ருசி பார்க்க வந்தவர்கள் முதலில் ஒரு கோப்பையில் இருக்கும் நீரை ருசி பார்த்த பின் வாயை நன்ருகக் கொப்புளிக்க வேண்டும். பிறகு அடுத்த கோப்பையை ருசி பார்க்க வேண்டும். அப்படி நான்கு கோப்பைகளையும் ருசி பார்க்க வேண்டும். ஒவ்வொருவராக இவ்வாறு ருசி பார்த்தனர். நான்கு கோப்பைகளையும் ருசி பார்த்தபின் எந்தக் கோப்பையில் உப்பு அல்லது சர்க்கரை கரைந்திருக்கிறது என்று அவர்கள் சொல்ல வேண்டும். உப்பு கரைந்திருந்த கோப்பையைச் சுட்டிக் காட்ட இரத்த அழுத்தம் அதிகம் இருந்தவர்களுக்கு இரத்த அழுத்தம் சாதாரணமாக இருப்பவர்களைவிட இன்னும் அதிக உப்பைக் கரைத்துக் கொடுக்க வேண்டியிருந்தது. சிலருக்கு இரண்டு மடங்கு அதிகம் கரைக்கவேண்டி வந்தது. இன்னும் சிலருக்கு 30 மடங்கு கூட உப்பு கரைக்கவேண்டி வந்தது. அப்பொழுதுதான் நீரில் உப்பு இருக்கிறதென்று அவர்கள் உணர்ந்தனர். இனிப்பைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் அவ்வளவு வேற்றுமை இல்லை. உப்பு, அதிக இரத்த முள்ள நோயாளிகளின் சிறு நீரில் அதிகமாகக் காணப்படுகிறது. இதனால் தான் அவர்கள் அதிகமாக உப்பைச் சேர்த்துக் கொள்கிருர்களோ? அல்லது அளவுக்கு மிஞ்சி உப்பு சேர்த்துக் கொள்வதும் இரத்த அழுத்தம் அதிகமாவதற்குக காரணமா? இதை அறிய வேண்டியது அவசியம் என்கின்றனர் ஆராய்ச்சி நடத்திய ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக மருத்துவர்கள் டாக்டர் சொயிஸி, லஸக்ன, நார்மா பாவிஸ், வியோன் டெட்ரியால்ட்.

உப்பு அதிகமாக உட்கொள்வது ஏற்கனவே இரத்தம் அதிகரிக்கக் கூடிய உடல் நிலையிலுள்ளவர்களுக்கு அந்த நோயை விரைவில் கொண்டு வரும் என்ற கருத்து இருக்கிறது. உப்பு உட்கொள்வது பற்றிய இந்த ஆராய்ச்சி முடிவு சரியாக இருந்தால் இரத்த அழுத்த அதிகரிப்பு நோய் விரைவில் வரக்கூடிய நிலையில் இருப்பவர்கள் உணவில் அதிக உப்புச் சேர்த்துக் கொள்வார்கள் என்கின்றனர் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்து ஆய்வாளர்கள். ஏனெனில் அவர்களுக்கு மற்றவர்களைவிட மிக அதிகமாக உப்பு உபயோகித்ததால்தான் உப்பு ருசி தெரிகிறது.

## தாய்ப் பால் எப்படி உண்டாகிறது?

"தாய்ப்பால் எப்படி உண்டாகிறது?' உடம்பிலுள்ள 'ஸெல்' கள் ஜீவனுள்ளதாக இருக்கிறதா அல்லது செயலற்று விட்டதுவா?" ஆகிய விஷயங்கள் குறித்து மேற்கு ஜெர்மன் பிரபல உடற்கூறு சரித்திர நிபுணரும் நரம்பு நோய் சிகிச்சைகளில் அதிக அனுபவமுள்ளவருமான திரு. உல்ப்காங் பெர்க்மான் என்பவருக்கு மிகவும் விலையுயர்ந்த 'மைக்கிராஸ்கோப்' கருவி பரிசாக வழககப்பட்டிருக்கிறது. தாய்ப்பால் உற்பத்தி பற்றி இதுவரை சரியான விவரங்கள் விஞ்ஞான உலகிற்கு இன்னும் கிடைத்தபாடில்லை. இவர் ஆராய்ச்சிகள் காரணமாக ஸ்திரீகளுக்கு மார்பகத்தே தோன்றும் புற்று நோயைப் பற்றிய காரணங்களை கண்டுபிடிக்க வழி ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கீல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் உல்ப்காங் பெர்க்மான் என்ற நரம்பு வியாதி சிகிச்சை நிபுணர்க்கு மிக உயர்ந்த விருதுகள் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கிருர். உடல் கூறு சாத்திர பேராசிரியராகப் பணியாற்றிவரும் இவருக்கு 6,00,000 ஆவதாக தயாரிக்கப்பட்டுள்ள லீட்ஸ் மைக்கிராஸ்கோப் கருவி பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

எர்னஸ்ட் லீட்ஸ் என்பவரும், வெட்ஸ்லர் என்பவரும் பூதக்கண்ணடி சம்பந்தப்பட்ட கருவிகளைத் தயாரித்து விற்று வந்தனர். 1907-ம் ஆண்டில் தாங்கள் தயாரித்த 1,00,000 வது மைக்கிராஸ்கோப்பை க்ஷயரோக வியாதிக்கு காரணமான கிருமிகளைக் கண்டுபிடித்த ராபர்ட் கோச் என்பவருக்கு பரிசாக அளித்தனர். இம்மாதிரி பரிசுகளைப் பெற்றவர்கள்: பேராசிரியர் மார்டின் ஹீடன்ஹெய்ன், பேராசிரியர் லுட்விக் அஷ்சாப், பேராசிரியர் பால்வெஸ், இவர் நியூயார்க்கிலுள்ள ராக்பெல்லர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த உயிரியல் நிபுணராவார்.

பெர்க்மான் இந்தப் பரிசை பெறுபவர்களில் ஆருவதாவர். நரம்பு வியாதி பற்றியும் மைக்கிராஸ்கோப் அனுடமியிலும் இவர் பிரபல நிபுணர். எலெக்டிரான் மைக்கிராஸ்கோப்பையும், கண்ணடி மூலம் பார்க்கும் ஆப்டிகல் மைக்கிராஸ்கோப்பையும் இணைத்து இவர் ஆராய்ச்சிகள் செய்து வந்தார். உடற்கூறு சாத்திரம் பற்றியும் நரம்புகள் பற்றியும் இவர் எழுதிய நூல் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். அநேகமாக ஒவ்வொரு வைத்தியப் படிப்பு மாணவரிடமும் இப்புத்தகம் இல்லாமல் இராது.

1946-ம் ஆண்டு முதல் பேராசிரியர் பெர்க்மான் கீல் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிருர். இங்கு அவர் செய்த ஆராய்ச்சியில் கண்ணுக்குத் தெரியாமலுள்ள "ஸெல்" களை கண்ணடிக்குத் தெரியும் படி செய்யும் வழியைக் கண்டு பிடித்தார். இதன் மூலம் நரம்பு 'ஸெல்' கள் எல்லாம் எப்படி வேலைசெய்கின்றன என்பதை அவர் கண்டறிந்தார். இவருக்குப் பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்தும் தங்களிடம் பணியாற்ற வரும்படி அழைப்புகள் வந்த வண்ணமாகவே இருந்தது. ஆனால் அவர் கீல் பல்கலைக்கழகத்திலேயே இருக்க முடிவு செய்து விட்டார். "இங்கு எனக்கு எல்லாவிதமான சௌகரியங்களும் இருக்கின்றன" என்று அவர் கூறுகிருர்.

இப்போது இட நெருக்கடி இருந்த போதிலும் சீக்கிரமே விசாலமான ஆராய்ச்சிச்சாலை, இவருக்கு இந்தப் பல்கலைக்கழகத்தில் ஒதுக்கப்படவிருக்கிறது. இப்போதைக்கு இவருக்கு வசிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலேயே இவர் விலையுயர்ந்த ஆராய்ச்சிக் கருவிகளை வைத்திருக்கிருர். தாய்ப்பால் எப்படி உண்டாகிறது என்பது பற்றி இவர் ஆராய்ச்சி செய்துவருகின்ருர். இவர் ஆராய்ச்சிகளின் விளைவாக ஒரு 'ஸெல்' ஜீவனுள்ளதாக இருக்கிறதா அல்லது செயலற்றுவிட்டதா என்பதைக் கண்டறிந்து விடலாம். பெண்களுக்கு மார்பகத்தே வரும் புற்றுநோயைக் கண்டுபிடிக்க இந்த ஆராய்ச்சிகள் பெரிதும் உதவியாக இருக்கும்.

---

## குருடர்களுக்கு மேலும் இரு பள்ளிகள்

லக்னே, ஏப்ரல் 7

உத்திரப் பிரதேச மாநிலத்தில் குருடர்களுக்கு மேலும் இரு பள்ளிகள் திறக்கபபடும். லக்னேவிலும் கோரக்பூரிலுமாக ஏற்கெனவே இரண்டுபள்ளிகள் இருக்கின்றன. குருட்டு மாணவர்களின் எண்ணிக்கை பெருகியதால் மேற்படி பள்ளிகள் இரண்டிலும் மாணவர்களின் எண்ணிக்கையை 50 லிருந்து 100 ஆக உயர்ததியுள்ளனர். புதுக் கட்டிடங்களும் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டுள்ளது.

## மணமாகி 2 வருடங்களுக்கு குழந்தை பெறக்கூடாது

### கட்டுப்பாடு விதிக்க எகிப்து அரசாங்கம் உத்தேசம்

கெய்ரோ, ஏப். 7

எகிப்து நாட்டில் திருமணம், விவாகரத்து, குடும்பக் கட்டுப்பாடு முதலியவைபற்றி நகல் மசோதா ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. புதிதாகக் கல்யாணம் செய்துகொள்ளும் தம்பதிகள் முதல் இரண்டு வருடங்களுக்கு குழந்தை பெறக்கூடாதென்று இந்த நகல் மசோதாவின் விவாகரத்துப் பற்றிய பிரிவு கூறுகிறது.

இந்த மசோதாவின் கீழ் எகிப்து நாட்டுப் பெண்களுக்குப் பல புது உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. இதன்படி குடும்பத் தகராறு காரணமாக பிரிந்து செல்லும் மனைவியை மீண்டும் தன்னுடன் வந்து வாழுமாறு கணவன் கட்டாயப் படுத்த முடியாது. ஆனல் இவ்வாறு பிரிந்து வாழும் மனைவிக்கு வாழ்க்கைப் பணம் கிடையாது. கணவன் கொடுமைப்படுத்தினல் பிரிந்து வாழ மனைவி உரிமை கோரலாம். இதன்படி விவாகரத்து ஏற்பட்டால் அப்போது மனைவிக்கு வாழ்க்கைப் பணம் கிடைக்கும். ஆனல் நீதிமன்றத்தின் மூலம் தான் விவாகரத்து பெறமுடியும்.

ஏற்கனவே முதல் மனைவி உள்ள ஒருவர் இரண்டாவது மனைவியைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினல் அதற்கான காரணங்களைக் காட்டிப் பிறகு நீதிபதி அனுமதி கொடுத்தால்தான் இரண்டாம் மனைவியைக் கல்யாணம் செய்து கொள்ள முடியும். இவ்விதமான நிலையில் முதல் மனைவி விவாகரத்துப் பெறலாம்.

தவிர மேற்படி நகல் மசோதாவின்படி ஒவ்வொருவரும் திருமணத்துக்கு முன்பாக வைத்திய பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்.

குடும்பக்கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகள் முதல் இரண்டு வருடங்களுக்கு குழந்தை பிறக்காதபடி பார்த்துக்கொளளவேண்டும் என்று மேற்படி நகல் மசோதாவில் கூறப்பட்டுள்ளது. அதன்பிறகு நாலு வருடத்துக்கு ஒரு குழந்தை வீதம் தான் பெறலாம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே அதிகம் குழந்தைகள் பெருமல் தடுக்க எகிப்து அரசாங்கம் கர்ப்பத் தடை மாத்திரைகளைப் பெரும் அளவில் சப்ளை செய்யும். ஏற்கனவே இந்த மாத்திரைகள் உற்பத்திச் செலவை விடக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

---

## ஜனவரி யோசனை

### சுகாதார இலாகா ஆதரிக்கவில்லை

புதுடில்லி, ஏப். 9

மூன்று குழந்தைகளுக்கு மேல் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின்மீதும் ஜனனவரி விதிக்கலாம்; கருச் சிதைவை சட்டசம்மதமாக்கலாம் என்று ஜனன விகிதத்தைக் குறைப்பதற்காக, சுகாதார சர்வே கமிட்டியைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள் தெரிவித்த யோசனையை யூனியன் சுகாதார இலாகா உசிதமெனக் கருதவில்லை. பொருளாதார ரீதியில் தாழ்வான நிலையிலுள்ளவர்களுக்குத்தான் அதிகக் குழந்தை பிறக்கிறது. ஆதலால் இந்த வரி அவர்களைப் பெரிதும் பாதிக்கும் என்று சுகாதார இலாகா கருத்து வெளியிட்டுள்ளது.

பிரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது
'பிரீடம்' மார்க் கற்பூரம்
என்றே கேட்டு வாங்குங்கள்.
இது ஓர் சிறந்த தயாரிப்பு
தயாரிப்பாளர்கள்,
பிரீ லங்கா இண்டஸ்ட்ரீஸ்,
மினுவாங்கொட.

# இமையாணன் கழகம் 'ஏ' பிரிவு சாம்பியனாகியது

வல்வெட்டித்துறை, செவ். வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இவ்வருடத்திற்காகிய இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 13-ம் திகதி நடைபெறும்.

இச்சுற்றுப் போட்டியில் இவ்வருடம் வடபகுதியிலிருந்து மிகப் பிரபல்யமான 11 கழகங்கள் கலந்து கொண்டன. போட்டிகள் யாவும் மிகவிறுவிறுப்பான முறையில் நடைபெற்றன. 'ஏ' பிரிவுச் சாம்பியனாக உடுப்பிட்டியைச் சேர்ந்த இமையாணன் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் 'பி' பிரிவுச் சாம்பியனாக வல்வை றெயின்போஸ் கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 13-ம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டிக்கும் பரிசளிப்பு விழாவிற்கும் நீச்சல்வீரன் ஆனந்தன் அவர்கள் தலைமை தாங்குவார். வெற்றிக் கோஷ்டிகட்கு ஆனந்தன் பரிசில்கள் வழங்குவார். சாம்பியனாகத் தெரிவு செய்யப்படும் கோஷ்டிக்கு சிவசுப்பிரமணியம் சலேஞ் கிண்ணமும் இரண்டாவதாக வரும் கோஷ்டிககு துரைராசா சலேஞ் கிண்ணமும் வழங்கப்படும். 1961-ம் ஆண்டு வல்வை றெயின்போஸ் கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## திருக்குறள் நாடக மன்றம்
### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

திருக்குறள் நாடக மன்றக் கூட்டம், அதன் பணிமனையில் கூடியபோது, அடுத்தமாதம் மூன்றுவது ஆண்டுவிழாவைக் கொண்டாடுவதென்றும், நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு வரவேற்பு அளிப்பதென்றும் முடிவு செய்தது. மன்றத்தின் அடுத்த நாடகம் வெளியிடுவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. பின்வருவோர் நடப்பு வருட உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: புதுமை லோலன். உதலைவர்: தெல்லியூர் கணேஷ் செயலாளர்: க. வன்னியசிங்கம், இணைச் செயலாளர்: சு. குணராசா, பொருளாளர்: க. சுப்பிரமணியம், கணக்குப் பரிசோதகர்: ச. மரியாம்பிள்ளை, 9 பேர்கொண்ட ஓர் செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

**மருதானையில்**

## ரயில்சேவை பாதிக்கப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

மருதானையில் தண்டவாளங்களைப் போட்டுக் கொண்டிருந்த 200க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்றுவேலை நிறுத்தம் செய்ததால் ரயில் போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டது.

தண்டவாளங்களைப் போடும் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசி சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் வேலைக்கு வராதிருந்த பின்னர் நேற்று வேலைக்குத் திரும்பிய போது போர்மனிடம் சமர்ப்பித்த வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைப் போர்மன் ஏற்றுக் கொள்ளாது அவரை வேலையை விட்டுச் செல்லுமாறு கூறியதைத் தொடர்ந்தே இவ்வித தகராறு ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. ரம்பாலா இதுபற்றிக் குறிப்பிடுகையில் 200க்கு மேற்பட்ட தண்டவாளம் போடும் தொழிலாளர் ரயில் பாதையில் நின்று கொண்டு ரயில் போக்குவரத்துக்குச்

செய்யாது தடுத்ததாகவும் பொலிஸாரும் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் ஆகியோரும் இதில் தலையிட்டபின்னரே ரயில் போக்குவரத்துச் சேவை சாத்தியமாகியது என்றும் தெரிவித்துள்ளார்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## புதன் 10-4-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 மூவர் இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிகழ் ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 ஆர். முத்துச்சாமி—வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 "அதிகரித்துவரும் குற்றங்களை எவ்வாறுதடுக்கலாம்"-விவாதமேடை, 9-45 தொகுப்பிசை.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 ராதா சுப்ரமணியம்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்தி அரங்கம் (சென்னை அஞ்சல்), 7-45 'நிறைகுடம்'நாடகம், 8-00 கோட்டுவாத்தியம், 9-15 நல்லுரை, 9-20 பொன்னெளிர் பாரதம்—இசை நிகழ்ச்சி, 9-50 இசை மாலை.

## கூ. மொ. வி. ஸ்தாபன கிளை திறப்பு ஒத்திவைப்பு

அம்பாறை, செவ்வாய்

இங்கு நேற்றுத் திறக்கப்படவிருந்த கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக்கடை உத்தேசிக்கப்பட்டது போல் திறக்கப்படவில்லை. திறப்பு விழாவைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தப்புதுக் கடைக்குத் தேவையான O! பொருள்கள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் இக் கிளை ஸ்தாபனத்தை திறப்பதற்கான முழு ஏற்பாடுகளையும் செய்யாததாலேயே இவ்விதம் ஒத்திவைக்கப்பட்டதாக அம்பாறை எம். பி. திரு. இந்திரசேன சொய்சா தெரிவித்துள்ளார்.

## சனசமூகநிலைய ஆண்டுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கம், சனசமூகநிலையம் என்பவற்றின் 44-தும் 15தும் ஆண்டுவிழாவையொட்டி சங்க இல்லங்களுக்கிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியின் முடிவுகள் வருமாறு.

மேற்படி போட்டியில் செல்லப்பா இல்லத்தைச் சேர்ந்தவர்கள் சிதம்பரப்பிள்ளை இல்லத்தினரால் ஒரு இன்னிங்சும் 16 ஓட்டங்களாலும் தோற்கடிக்கப்பட்டனர். சிதம்பரப்பிள்ளை இல்லத்தினருக்கு மேற்படி வெற்றிக்கு காரணமாக இல்லத்தலைவன் சு. பாலசுந்தரம் 76 ஓட்டங்களும், ஆ. குணரத்தினம் 23 ஓட்டங்களும்பெற்றுகொடுத்தனர். செல்லப்பா இல்லத்தில் ந. ஜெயரட்ணம் 16 ஓட்டங்களும், ந. சிறீஸ்காந்தன் 16 ஓட்டங்களும் பெற்றுக்கொடுத்தனர். இப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரனுக்குரிய பரிசை செல்வன் சு. பாலசுந்தரம் பெறுகிறார்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக திருவாளர்கள் எஸ். ஜெ. அன்ற்று, எஸ். ஜெகேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றினர்.

மேற்படி விழாவையொட்டி ஓர் பகிரங்க 5 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## புத்தாண்டு விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, செவ்வாய்

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு விழா கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதுவரை பத்துப்போட்டிகள் முடிவடைந்துள்ளன. இப்போட்டிகளின் விபரங்கள் பின்வருமாறு.

மாதனை ஏ. கோஷ்டிக்கும் வீனஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மாதனைக் கோஷ்டி வெற்றியீட்டியது. மனோகரா 'ஏ'க்கும் நியூ ஸ்டாருக்கும் நடைபெற்ற போட்டியில் மனோகரா 'ஏ' வெற்றிபெற்றது. இமையாணன் கோஷ்டிக்கும் மனோகரா 'பி' கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் இமையாணன் வெற்றியீட்டியது. வல்வெட்டித்துறைக் கோஷ்டி இளங்கம்பன் கோஷ்டியைத் தோற்கடித்தது. வளர்மதி கோஷ்டி வியாபாரிமூலைக் கோஷ்டியைத் தோற்கடித்தது. மோனிங் ஸ்டார்கோஷ்டி வதிரிக்கோஷ்டியிடம் தோல்வியடைந்தது. இளங்கம்பன் கோஷ்டி மாதனைக்கோஷ்டியால் தோற்கடிக்கப்பட்டது. கோல்டின்பிளாஷ் கோஷ்டி நெல்லண்டையை வென்றது. விவேகானந்தா கோஷ்டி பவர்ஸ்டார் கோஷ்டியைத் தோற்கடித்தது. இந்தியன் கோஷ்டி விக்னேஸ்வராக் கோஷ்டியால் தோற்கடிக்கப்பட்டது.

14-ம் தேதிவரை நடைபெற இருக்கும் இச்சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் 14-ம் தேதி மாலைவரை நடைபெறும். வெற்றிபெறும் கோஷ்டியினர் தெரிவுக்கோஷ்டியுடன் காட்சிப் போட்டி ஒன்றிலும் கலந்துகொள்வாரெனத் தெரியவருகின்றது.

## 'இறந்தபின்னரே கௌரவம்'

தெகிவளை, செவ்வாய்

'இலங்கையில், கலைஞர்கள் இறந்தபின்தான் கௌரவிக்கப்படுகிறார்கள்' என டாக்டர் ஜி பி. மலலசேகரா கொழும்பில் கலைக்கண்காட்சியை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"கலைஞர்கள் உயிருடன் இருக்கும்போதே கௌரவிக்கப்படவேண்டும். 25 வருடங்களுக்கு முன் எவரும் கண்டிய நடனத்தில் விருப்பம் காட்டவில்லை. ஆனால் இப்பொழுது வசந்த குமாரா போன்ற கலைஞர்களால் இந்த நடனம் புத்துயிர்பெற்று வருகிறது."

# வீடு வாடகை|விற்பனை, காணி குத்தகை|விற்பனை, பொருள்கள் வாங்க|விற்க இலகுவான வழி.

### ஈழநாடு சிறு விளம்பர விகிதங்கள்

#### விளம்பரப் பிரிவுகள்

**பிரிவு 1.**
பிறப்பு, இறப்பு, திருமணம், அழைப்பிதழ், வாழ்த்து, அனுதாப விளம்பரம், தனிப்பட்டவிஷயம், பொருள்களைக் காணவில்லை, பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன முதலியன.

பி. கு. திருமண விளம்பரமாயின், மணமக்களது கையொப்பமும், இறப்பு விளம்பரமாயின் இறந்தவரது உரிமையாளரின் கையொப்பமும் தேவை.

**பிரிவு 2.**
வேலை தேவை, வேலை காலி, விளையாட்டு வகுப்புகள், டியூசன், வர்த்தக வகுப்புகள், நடன வகுப்புகள், புத்தகங்கள், சாஸ்திரம் முதலியன.

**பிரிவு 3.**
வீடு வாடகைக்கு, விற்பனைக்கு, காணி குத்தகைக்கு, விற்பனைக்கு, வீடும் சொத்தும், தங்குமிடவசதி, தோட்டம் முதலியன.

**பிரிவு 4.**
தாவர உற்பத்திகள், தெங்குப் பொருள்கள், கோழிப் பண்ணை, கால்நடை, செடிகள், விதைகள், உரம் முதலியன.

**பிரிவு 5.**
சைக்கிள், மோட்டார் சைககிள், வானொலிப்பெட்டி, கடிகாரம், தையல் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மோட்டார் உறுப்புகள், கார்கள், லொறிகள், புகைப்படச் சாதனங்கள், தட்டெழுத்துப் பொறிகள், அலுவலக உபகரணங்கள், எஸ்டேட் சப்ளைஸ், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள். டிராக்டர்கள், றெயிலர்கள், கட்டிடச் சாமான்கள் முதலியன.

**பிரிவு 6.**
வைத்தியம், மருந்துகளும் மூலிகைகளும், மருத்துவம் முதலியன.

**பிரிவு 7.**
வர்த்தக அறிவித்தல்கள், பணவசதி, சீட்டுக்குப் பணம், வியாபார ஸ்தலங்கள் முதலியன.

**பிரிவு 8.**
ஆபரணங்கள், இசைக்கருவிகள், அழகுக்கலை முதலியன.

ரூ. 50க்குக் குறைந்த பெறுமதியான பொருள்களின் விளம்பரங்களாயின், முதல் 10 சொற்களுக்கும், ரூ. 2-00 வீதமும் அதற்குக் கூடுதலான ஒவ்வொரு சொற்களுக்கும், 10 வீதமும் அறவிடப்படும்.

விளம்பரத்தில் குறிப்பிடப்படாத விளம்பரதாரர்களின் பெயர்கள் எக்காரணம் கொண்டும் எம்மால் அறிவிக்கப்பட மாட்டாது.

'ஈழநாடு' மேற்பார்வையில் அமையும் விளம்பரங்களுக்கு நூற்றுக்கு 50 வீதம் வேறாக அறவிடப்படும்.

தபாற் பெட்டி என் குறிப்பிட்ட விளம்பரங்களாயின் மேலதிகமாக 5 சொற்கள் கூட்டி எண்ணப்படும்.

| சொற்கள் | ஒருமுறை பிரசுரிக்க. | 3ம் அதற்கு மேற்பட்ட பிரசுரங்களுக்கு. வீதம் |
|---|---|---|
| 15 | ரூ. 3-50 | ரூ. 3-00 |
| 16 | 3-60 | 3-10 |
| 17 | 3-70 | 3-20 |
| 18 | 3-80 | 3-30 |
| 19 | 3-90 | 3-40 |
| 20 | 4-00 | 3-50 |
| 21 | 4-10 | 3-60 |
| 22 | 4-20 | 3-70 |
| 23 | 4-30 | 3-80 |
| 24 | 4-40 | 3-90 |
| 25 | 4-50 | 4-00 |
| 26 | 4-60 | 4-10 |
| 27 | 4-70 | 4-20 |
| 28 | 4-80 | 4-30 |
| 29 | 4-90 | 4-40 |
| 30 | 5-00 | 4-50 |
| 31 | 5-10 | 4-60 |
| 32 | 5-20 | 4-70 |
| 33 | 5-30 | 4-80 |
| 34 | 5-40 | 4 90 |
| 35 | 5-50 | 5-00 |
| 36 | 5-60 | 5-10 |
| 37 | 5-70 | 5-20 |
| 38 | 5-80 | 5-30 |
| 39 | 5-90 | 5-40 |
| 40 | 6-00 | 5-50 |

40க்கு மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் சதம் 15.

# தமிழ் போராட்டத்தில்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் 180 பொலிசாரில் 165 பேர் தமிழோ ஆங்கிலமோ தெரியாதவர்கள் இவர்களால் எப்படி தமிழருக்குச் சேவை செய்யமுடியும்.

எமது உரிமையை அரசாங்கம் எமக்குத்தராவிடின் நாம் இரண்டிலொன்று என உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். "நாம் பலாத்காரமாக சிங்கள அரசாங்கத்தையும், ராணுவத்தையும் கலைக்கவேண்டும், அல்லது அவர்களுடைய நல்லெண்ணத்தைப்பெற்று அதன்மூலமாக உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறுகிறார்.

சிங்களவருக்கு நல்லெண்ணம் உண்டாக நாம் நடக்கவேண்டுமென அவர் சொல்லுகிறார். மேலும் அவர் தற்போதுள்ள அரசாங்கம் தமிழர்களை நசுக்குகிறது என்றும் அவர்கள் இன்று அனுபவிக்கும் அநியாயங்கள் முன்னர் ஒருபோதும் அனுபவித்ததில்லை என்றும் சொல்லுகிறார்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது நாம் எப்படி சிங்களவரின் நல்லெண்ணத்தையும் தயவையும் பெறமுடியும் என்பதனைக் காட்டவில்லை. அதே நேரத்தில் திரு. ஜி ஜி. எமது உரிமைகளில் அரசாங்கம் கைவைத்தால் அதனை எதிர்க்க வேண்டும் என்கிறார். எவ்வாறு இரண்டையும் செய்யமுடியும் என்பதனை அவர் சொல்லவில்லை. அரசாங்கம் செய்யும் அநியாயங்களை நாம் எதிர்த்தால் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெறமுடியாது.

தமிழினத்தின் உரிமைகள் பறிக்கப்படும்போதும் அவர்களது உரிமை கீழ்மொழியாக்கும்போதும் நாம் அவர்களைச் சரணாகதியடைந்தால் தான் சிங்களமக்களின் நல்லெண்ணம் எமக்குக் கிடைக்கும்.

வட்டமேசை மகாநாட்டினால் எமது குறைகளைத் தீர்க்கமுடியுமெனக்கூறப்படுகிறது. எமக்கு வட்டமேசை மகாநாட்டில் அதிக நம்பிக்கையில்லாவிடினும் எம்மை அரசாங்கம் ஒரு வட்டமேசை மகாநாட்டுக்கு அழைப்பின் நாம் செல்லத் தயாராக இருக்கிறோம் ஆனால் ஒரு வட்டமேசை மகாநாடு கூட்டப்படமாட்டாது; அதனால் தேவையிருக்காது.

கடைசியாக திரு. பொன்னம்பலம் திரும்பத் திரும்பச் சொல்லி வருவது எமது மொழியுரிமையைக் கேட்டும் அதே நேரத்தில் எமக்கு சமஷ்டி வேண்டும் என்று கேட்பதனால் தான் மொழி உரிமை பெற்றுக்கொள்வது முடியாத காரியமென்பதாகும். ஆனால் அரசியல் வியாதிக்கு நாம் சிறுபான்மையினராக இருப்பதுவே காரணம்.

இந்தியாவில் 76 மொழி பேசும் மக்கள் தமது அரசாங்க அலுவல்களை தமது மொழியில் நடத்திவந்து தமது பண்பாடு கலாசாரத்தைவளர்த்து மற்ற மொழி பேசும் மக்களுடன் ஒன்றுபட்டு ஒரு தேசமாக பலமடைகிறார்கள். அதுபோலத்தான் ரஷ்யா, கனடா,பாகிஸ்தான், யூகோஸலேவியா, சுவிற்சலாந்து போன்ற. இடங்களில் சமஷ்டியாட்சி மூலமே மக்கள் சுபீட்சமாக வாழ்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:

"நாட்டின் பிரிவினைக்கு எதிராக, ஐக்கிய இலங்கையில் தமிழரும் தமது உரிமையுடன் சுயமரியாதையோடு, ஒரு தேசிம இனமாக வாழவேண்டுமென்றே சமஷ்டிக் கோரிக்கையை விடுத்தோம். அதை மறுத்த அரசாங்கத்தை எமது கோரிக்கைக்கிணங்க தூண்டுவதற்காகவே அகிம்சை முறையில் தமிழ் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். தமிழ்ப் போராட்டத்தில் தமிழியக்கம் ஓர் முக்கிய கட்டமாகும். தமிழ் இயக்கத்தை ஆரம்பித்த பொழுது இதை ஒரு விளையாட்டான காரியமாக பலர் நினைக்கக்கூடும். இத்தமிழ் இயக்கம் உரிமை பெறும் இயக்கமாகும். ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழில் மட்டும் தமது கருமங்களை ஆற்றவேண்டுமென்று இவ்வியக்கம் மூலம் தமிழ் மக்களைக் கேட்கின்றோம். இவ்வழியில் தமிழ் பேசும் மக்கள் ஒன்று திரண்டால் அவர்களின் செய்கையை நிராகரிக்க அரசாங்கத்தால் முடியாது. எமது தமிழ் மட்டும் இயக்கம் துரிதமடைந்துவருகின்ற பொழுது தான் அதனுடைய முழுப்பயனும் கிடைக்கும். தமிழ்ப் பகுதியிலே உள்ள மக்களின் விருப்பத்தற்கு மாறாக சிங்களத்தில் வேலை செய்யக்கூடியவர்களை தமிழ் பகுதிகளுக்கு அனுப்பி இலகுவில் சிங்களத்தை திணிக்கலாம் என்ற அரசாங்கத்தின் நோக்கத்தை முறியடிப்பது உங்கள் கடமை. தமிழ்பேசும் மக்களில் ஒவ்வொருவரும் இக்கடமையை உணர்ந்தால் தமிழ் பேசும் உத்தியோகஸ்தர்கள் தமிழ் பேசும் பகுதியிலிருந்து மட்டுமல்ல ஏனைய பகுதிகளிலும் கட்டாயமாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு கடமையாற்றக் கூடிய சூழ்நிலை ஏற்படும். எவ்வளவு அளவிற்கு தமிழியக்கத்தை தமிழ் பேசும் மக்கள் அலட்சியம் செய்வார்களோ அவ்வளவு தூரத்திற்கு சிங்களத்தை திணிக்கக்கூடிய வசதி ஏற்படும் என்பதை மறக்க வேண்டாம்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"தமிழ்பேசும் மக்கள் சம்பள உயர்வுக்காக சிங்களத்தைக் கற்பது அடிமைத்தனமான தாகும். தமது கணவர்மாரை சிங்களம் படிககவிடாது தடுப்பது தமிழ்ப் பெண்களின் தலையாய கடமையாகும்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பாராளுமன்றத்தில் மணித்தியாலக் கணக்கில் தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதிகள் சிங்களச் சட்டத்திற்கு எதிராகப் பேசியுள்ளார்கள். அதனால் ஒருவித பயனும் கிடைக்கவில்லை. நாம் அரசங்கத்துடன் பல முறைகளும் பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளோம். ஏனைய தமிழ்த் தமிழ்த் தலைவர்களும் பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளார்கள். ஆனால் தமிழ் பேசும் மக்களின் நிலைமையோ எவ்விதத்திலும் மாறுதல் அடையவில்லை. இவ்விதம் பேசியும் ஒரு பயனும் கிடைககாதபோது வட்டமேசை மகாநாடு ஒரு கேலிக்கூத்தாகும்.

# திருமலையில்தமிழ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கம் இன்று ஆரம்பிக்கப்பட்டது.

திருமலையில் உள்ள உப-தபாற்கந்தோர்களிலும் இன்று தமிழியக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

மிகவிரைவில் தமிழியக்கம் ஏனைய அலுவலகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட விருப்பதாக திரு. இராஜவரோதயம் கூறினார்.

திருமலையில் 17-ம் திகதியும் மூதூரில் 18, 19-ம் திகதிகளிலும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமருக்கு தந்தி

திருமலையில் தமிழியக்கவாரத்தை இன்று ஆரம்பித்து வைத்த ஆர். ராஜவரோதயம் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கும் கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத்துக்கும் தமிழில் இரு தந்திகளை அனுப்பிவைத்தார்

பிரதமருக்கு அனுப்பிய தந்தியில் இந்த நாட்டில் சிங்களவரும் தமிழரும் சகோதரர்கள் போல் வாழ வழிவகுத்துத் தருமாறும், கல்வி அமைச்சருக்கு அனுப்பிய தந்தியில் சிங்களவர், தமிழர், முஸலிம்கள் இந்நாட்டில் சகோதரர்கள் போல வாழ வழிவகுக்கும் படியும் அவர் கேட்டுள்ளார்.

# இந்திய ஜனாதிபதி...

4-ம் பக்கத் தொடர்ச்சி

காவலாளர்கள் நிற்பார்கள். பின்னர் உபசரிப்பு நடைபெறும்.

"கில்ஹால்" வரை உள்ள தூரத்துக்கு ரோட்டின் இருபுறங்களிலும் பிரிட்டிஷ் ராயல் கடற்படை, விமானப்படை, முதலியவற்றைச் சேர்ந்த ராணுவத்தினர் அணிவகுத்து நிற்பார்கள். "கில்ட்ஹாலில்" ராஜாங்க விருந்தினருக்கு லண்டன் மேயர் உரிய மரியாதைகளுடன் வரவேற்பு அளிப்பார். இங்கு நடைபெறும் வைபவத்தில் காண்டர்பரி ஆர்ச்பிஷப், பிரிட்டிஷ் பிரதமர் மற்றும் பல்வேறு பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள்.

இதன் பின்னர் ராஜாங்க விருந்தினர் பதில் மரியாதையாக பிரிட்டிஷ் அரசியாருக்கும் எடின்பரோ கோமகனுக்கும் ஒரு விருந்தளிப்பார். சாதாரணமாக இது அந்த ராஜாங்க விருந்தினரின் தூதரகத்தில் கோலாகலத்துடன் நடைபெறும். மறுநாட்காலையில் ராஜாங்க விருந்தினரின் விஜயத்தில் அதிகாரபூர்வமான பகுதி முடிவுபெறும். இதன் பின்னர் அவர் லண்டனையோ மேலும் சிலநாட்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விருந்தாளியாகத் தங்குவார். அப்போது அவர் ஓட்டலிலோ அல்லது தனது நாட்டின தூதரகத்திலோதான் தங்குவது வழக்கம்.

# பிரதமர் பேச தயாரில்லை!

கொழும்பு, செவ்வாய்

தமிழரசுக்கட்சியினர் தங்களது நேரடிநடவடிக்கையோசனையைக் கைவிடாதவரை தமிழரசுக்கட்சியினருடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இல்லை என்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது என்று கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்களத் தினசரி ஒன்று கூறுகிறது.

## ஆங்கிலத்தில் பேசினார்

இதே சிங்களத் தினசரி வெளியிட்டுள்ள மற்றொரு செய்தியில், கொழும்பிலிருந்து விமானத்தில் யாழ்ப்பாணம் சென்ற டாக்டர் நாகநாதன் அதே விமானத்தில் சென்ற திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடனும், திரு. வி. தியாகலிங்கத்துடனும் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

# 'அவசரகால ஆண்டு நிறைவு'

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணத்தில் பொதுக்கூட்டமொன்றினை நடத்துவதற்கு தமிழரசுக்கட்சி முடிவுசெய்துள்ளது. அவசரகாலம் பிறப்பிக்கப்பட்டு இரண்டாவதாண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் இக்கூட்டம் நடத்தப்படவிருக்கிறது. ஒவ்வொரு தொகுதிகளிலிருந்தும் அத்தொகுதி எம். பிக்களின் தலைமையில் தொண்டர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு யாழ்ப்பாணம் வருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன,

# சென்னையில் சீன அதிகாரிகள்

சென்னை, ஏப்ரல் 9

டில்லியிலுள்ள சீனத் தூதராலயத்தின் முதல் காரியதரிசியும், மேலும் 4 அதிகாரிகளும் இன்று சென்னை வந்துள்ளனர்.

# நாகநாதன் மறுப்பு

## பத்திரிகைச் செய்திக்கு!

யாழ்ப்பாணம், புதன்

வவனியாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக்கூட்டத்தில் வட்டமேசை மகாநாடு பற்றி எதுவும் பேசப்படவில்லை என்று நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அறிக்கையில் மேலும் சொல்லியிருப்பதாவது:-

சகல கட்சிகளும் பங்குபற்றுகின்ற வட்டமேசை மகாநாடொன்றில் தமிழரசுக்கட்சியும் கலந்துகொள்ளவேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது. தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை நிகழ்ச்சி நிரலில் வட்டமேசை மகாநாடு பற்றிய ஆலோசனை இருக்கவில்லை. வட்டமேசை மகாநாடுபற்றி ஆலோசிக்கப்பட்டதெனவும், எனது ஆலோசனையை ஏற்காததால் நான் கூட்டத்திலிருந்து வெளியேறியதாகவும் வெளிவந்த செய்தி முற்றிலும் பொய்யானது. நான் அவ்வாறு வட்டமேசை மகாநாடு பற்றி பிரஸ்தாபிக்கவுமில்லை. கூட்டத்தைவிட்டுவெளியேறவுமில்லை. வெளியேறிய என்னை மீண்டும் கூட்டத்தில் பங்குபற்ற கூட்டத்திற்குத்தலைமை வகித்த இராசமாணிக்கம் அழைத்துவந்ததாகக் கூறப்படுவதும் பொய்யானது.

# பிரிட்டிஷ் கடனுதவி

புதுடில்லி, ஏப். 9

பிரிட்டன் நாலரைக் கோடி ரூபாய் கடனை இந்தியாவுக்களிக்கும் ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டது. 3-ம் திட்டத்துக்கு இப்புதிய கடன் நீங்கலாக, ஒன்பதரைக் கோடி பவுன் பிரிட்டன் அளித்திருக்கிறது.

# திரு. நடேசன் தமிழில் சத்தியப் பிரமாணம்

கொழும்பு, செவ்வாய்

இன்று நண்பகல் செனட் சபை கூடியபோது திரு. சு. நடேசபிள்ளை செனட்டராகத் தமிழில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். திரு. சு. நடேசபிள்ளை முன்னை நாள் செனட்டர் திரு. அஸீஸின் ஆசனத்தில் செனட்டர் குருபான் ஆதமலிக்கு அருகில் அமர்ந்தார்.

செனட்சபை கூடுமுன்னர் பல செனட்டர்கள் திரு. நடேசனுக்குப் பராட்டுத் தெரிவித்தனர். செனட் சபை மே மாதம் 30-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# 144 பேர் இன்று விடுதலை

புதுடில்லி, ஏப். 9

சிறைவிலிள்ள இந்திய யுத்தக் கைதிகளில் 144 பேர் நாளை விடுதலை செய்யப்படுவார்கள்.

# தமிழிசைப் பெருவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தனர் நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் நாடத்திய நான்கு நாள் இசைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவெய்தியது. இறுதி நாள் விழாவில் பல கச்சேரி நிகழ்ச்சிகளோடு, இசைவல்லார் செல்லத்துரைக்குப் பொன்னாடை போர்த்தி நிதி முடிப்பு வழங்கியும், நாதஸ்வர வித்துவான் திருநாவுக்கரசு குடும்பத்திற்கு நிதிமுடிப்பு வழங்கியும் கௌரவிக்கப்பட்டது. விழாவிற்கு கலையரசு சொர்ணலிங்கம் தலைமை வகித்தார்.


வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

நாளை முதல மகத்தான ஆரமபம
மக்கள் கண்குளிர இதயம் மகிழவருகிறது
கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்)(மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ண விஜிதா ஜெமினி
(திருமலை) (ஹட்டன் (ராகலை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என.......
நாடும் ஏடும் வாழ்த்துகிறது
நடிப்புலகம் போற்றுகிறது



காணத்தயாராகுங்கள்
★ சந்திரபாபு,
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி எஸ். துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி டி. ராஜகாந்தம்
★கள்ளபார்ட் நடராஜ்
மற்றும் பலர் நடித்த
சிவகாமி பிக்சர்ஸ்

குமார ராஜா

திரைக்கதை-வசனம் முரசொலிமாறன் எம்: ஏ.
இசை டி. ஆர். பாப்பா
டைரக்ஷன் ஜி. கே. ராமு
நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்
பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

மனோகரா
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - ஜெமினி - சாவித்திரி—சரோஜாதேவி
நடித்த
பார்த்தால் பசிதீரும்
தமிழ்பேசும் படம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.